பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 14 வெள்ளிக்கிழமை (28.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 99

# யாழ்.கோட்டைப் பகுதியில் பாரிய இராணுவ முகாம் அமைக்கும் பணி தீவிரம்!

## பொது அமைப்புக்கள் போர்க் கொடி

(அலுவலக நிருபர்)

**சமாதான சூழலில் யாழ்.குடா நாட்டு மக்களை அச்சுறுத்தும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபை முன்னர் இயங்கி வந்த இடத்தில் பாரிய இராணுவ முகாமொன்றை இராணுவத்தினர் அமைத்து வருவதினால், மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை உருவாக்கி வருவதாக குடாநாட்டு மக்கள் அச்சம் தெரிவித்துள்ளதுடன் இது புரிந்துணர்வு உடன் படிக்கைக்கு முரண்பாடான நடவடிக்கை எனவும் கண்டனம் செய்துள்ளனர்.**

பாரிய இராணுவ முகாம் அமைக்கும் நோக்கில் யாழ்.மாநகர சபை முன்னர் இயங்கிய வளாகத்தை இராணுவப் புல்டோசர்கள் சகிதம் துப்புரவு செய்யும் பணியில் இராணுவத்தினர் பலர் ஈடுபட்டுள்ளனர்.இதனால் மக்கள் பலத்த அச்சம் கொள்கின்றனர்.

யாழ்.மாநகரின் முன்னணிப் பாடசாலைகள்,இந்து கிறிஸ்தவ ஆலயங்கள், துரையப்பா விளையாட்டு அரங்கு,யாழ்.பொது சன நூல்நிலையம்,சுப்பிரமணியம் பூங்கா,முற்றவெளி,ரெலிக்கொம் நிறுவனம், வீரசிங்கம் மண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கிய இடத்தில் இந்த பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட இருப்பது மக்களின் அன்றாட இயல்பு (10ம் பக்கம் பார்க்க)



பக்தாத் நகரை நோக்கி அமெரிக்க கூட்டுப் படையினர்..

## ஈராக் மக்களை காப்பாற்றவே நாம் தாக்குதல் நடத்துகிறோம்



### அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் மக்களின் விடுதலைக்காக மிக உன்னதமான பணியை தாம் முன்னெடுத்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் இங்கிலாந்துப் பிரதமர் ரொனிப் பிளேயர் ஆகிய இருவரும் நேற்றுக் கூட்டாக பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினர்.


அம் மாநாட்டிலேயே புஷ் மேற் கண்டவாறு தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

ஈராக்குக்கு எதிராக மிகவும் உன்னதமான செயற்பாட்டுக்காக நாம் இணைந்து செயற்படுகின்றோம்.

சர்வாதிகார ஆட்சிக்குள் சிக்குண்டிருக்கும் ஈராக் மக்களின் விடுதலைக்காகவே நாம் இப்பணியை முன்னெடுத்துள்ளோம்.

ஈராக் மக்களின் நலன்களில் மிகவும் அக்றையாகவுள்ளோம். அவர்களின் வளர்ச்சியில் நாம் பங்காளிகளாக இருப்போம்.

பெற்றோலியப் பொருட்களின் (10ம் பக்கம் பார்க்க)



தவறுதலான தாக்குதலுக்குள்ளான அமெரிக்க ஆட்டிலறி வாகனம்.

## புலிகள் -முஸ்லிம் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும்,முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில்,நேற்று மட்டக்களப்பு வவுணதீவில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் எஸ்.ஜேக்கப் தலைமையில் நடை பெற்ற இச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள முஸ்லிம் மக்களின் நெற்பரப்பு வயல்களில் அவர்கள் அடுத்த போகம் முதல் பயிர்ச்செய்கையில் ஈடுபட புலிகள் அனுமதி வழங்கினர்.

அத்துடன் முஸ்லிம் மக்களுக்கு தமிழ் மக்கள் பூரண ஒத்தாசை வழங்குவார்கள் எனவும் உறுதி அளிக்கப்பட்டது.

சுமுகமான முறையில் இடம் (10ம் பக்கம் பார்க்க)

## யு.என்.எச்.சி.ஆர்-ரி.ஆர்.ஓ. பிரதிநிதிகள் வன்னியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று வன்னியில் தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கே.பி.றெஜி,திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, அவுஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த நரேன் ஆகியோர் ஐ.நா. உயர் மட்டக் குழுவினருக்கு வன்னியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள்,மேற் (10ம் பக்கம் பார்க்க)

### அரசு—புலிகள் நடைமுறைச் சிக்கல்களை தவிர்க்க

## போர் நிறுத்த கண்காணிப்புக் குழு உத்தேச வரைபு தயாரிக்கிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினதும இராணுவத்தினரதும் கடல் வலய நடமாட்டங்கள் மற்றும் தரைப் பிராந்திய எல்லைகள் தொடர்பான சிக்கல்களை தீர்க்கும் பொருட்டு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உததேச வரையறை ஒன்றைத் தயாரித்து வருகின்றது.

கடற் பிராந்தியத்தில் இருதரப்பினரதும் நடமாட்டங்கள் தொடர்பான ஒழுங்கு முறைகளும் கடலில் போர் நிறுத்த உடன் படிக்கை மீறப்படுவதான சம்பவங்களைத் தடுப்பதற்கான யோசனைகளும் இந்த வரைபில் இடம் பெறும் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரொல்கீசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இருதரப்பினரதும் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களும் கிழக்கு மாகாணத்தில் நிலவும் முரண்பாடுகளை நீக்குவதற்கான வழிவகைகள் குறித்தும் இதில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதுடன் எல்லைப் பகுதிகள் மற்றும் பரஸ்பரக் கைதிகள் விடுதலை தொடர்பாகவும் இந்த உத்தேச வரைபில் முன்மொழியப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலைமை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தற்போதைய சமாதானப் பேச்சுக்களால் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை

## இந்த நிலையில் நோபல் பரிசுக்கு முயற்சிக்கிறார் பிரதமர்—ஜனாதிபதி பரிகாசம்

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படுவரும் சமாதானப்பேச்சுவார்த்தையில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா குற்றம்சாட்டியுள்ளார்.**

அண்மையில் லண்டனிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் லண்டன் கிளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தற்போதைய அரசு ஆட்சியில் தொடர்ந்து இருப்பதையே முதன்மையாகக்கொண்டு செயற்பட்டு வருகிறது. இதற்காகப் பெருமளவுப் பணம் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு விலைக்கு வாங்கியுள்ளது.

அத்துடன், சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசும்-விடுதலைப்புலிகளும் என்ன பேசுகிறார்கள், என்னசெய்கிறார்கள் என்பது பற்றி ஆளும் கட்சியில் உள்ளபல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் எதுவும் தெரியாது.

இந்நிலையில் பிரதமர் ரணில் வக்கிரமசிங்கா நோபல்பரிசு பெறமுயற்சி செய்வது வேடிக்கையானது என்று பரிகசித்தார்.

தொடர்ந்தும் கூறுகையில், இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் 'காணிவேல்' போன்று ஒவ்வொரு நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன. இதற்காக பெருமளவு பணத்தை தற்போதைய அரசு வாரி வழங்குகிறது.

எவ்வாறு இருந்தாலும் இருதரப்பினரிற்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் எந்த வித முன்னேற்றத்தையும் காணக் கூடியதாக இல்லை.

அது மட்டுமன்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டில் என்ன பிரச்சினை ஏற்பட்டாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பு கொள்கின்றார். இருவரும் இது விடயத்தில் கலந்தாலோசித்து முடிவு எடுக்கிறார்கள்.

ஜனாதிபதியாகிய எனக்கோ அல்லது அமைச்சர்களுக்குகோ எதுவும் தெரியப்படுத்துவதில்லை.

பிரதமரின் இத்தகைய செயற்பாடுகளை சர்துரியமாகப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தமது படைப்பலத்தை பெருக்கி வருகின்றனர்.

போர் நடை பெற்றுக் கொண்டிருந்தபோது பலவீனப்மடைந்திருந்த விடுதலைப்புலிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அனுசரணையுடன் பலமடைந்துள்ளனர். அதே சமயம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூட விடுதலைப் புலிகளின் கைப் பொம்மையாகி விட்டார். புலிகள் விதிக்கும் கட்டளைகளுக்கு அவர் பணிந்து செயற்பட்டு வருகிறார்.



பயங்கரவாதிகள் எனப் புலிகளை விமர்சித்து வந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரும் பிரதமரின் செயற்பாட்டினால் விடுதலைப் புலிகளிற்கு அடிபணிந்து விட்டனர் என்று குறிப்பிட்டார். (உ-10)

# கப்ரின் குணசிங்கத்திற்கு அதிஉயர் "தேசிய விருது"

## உதைபந்தாட்ட சம்மேளனம் வழங்கியது

(சுண்டுக்குளி)

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள அகில இலங்கை



உதைந்தாடட சம்மேளனத்தின் பணிமனை யில் கடந்த 23ம் திகதி சம்மேளனத் தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிருஷாந்தி பெரேரா தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் கப்ரின் டி.ஏ.எம் குணசிங்க உதைபந்தாட் டத்திற்கு ஆற்றிவரும் அளப்பரும் சேவையைப் பாராட்டி அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அதிஉயர் விருதான தேசிய விருது வழங்கப்பட்டது.

ஈச்சமோட்டை சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு கற்கும் காலத்தில் சகல விளையாட்டுத்துறைகளிலும் கல்லூரி அணிகளுக்காக விளையாடி பெருமை சேர்த்தவர்.

பின்னர் வன பரிபாலன இலாகாவில கடமையாற்றும் பொழுது அகில இலங்கை வனபரிபாலன உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய அணிகளிலும் அங்கம்வகித்ததன் மூலம் அகில இலங்கை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உதைபந்தாட்ட அணிக்கும் தெரிவாகியிருந்தார்.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட போட்டிகளுக்கு நடுவராக கடமையாற்றியுள்ள இவர் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், யாழ். மாவட்ட கரப்பந்தாட்டசங்கம் ஈச்சமோட்டை விளையாட்டு கழகம், ஈச்சமோட்டை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சுண்டுக்குளி நலன் புரிச்சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும்,யாழ் பயிற்றுனர் சங்கத்தின் மேலதிக தவிசாளராகவும் யாழ். மாவட்ட கபடி சங்கம், யாழ்.மாவட்ட ஸ்போட்ஸ் கௌன்ஸ்சில் யாழ்.உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் உபதலைவராகவும் கடமையாற்றி வருகின்றார். (உ-110)

# சமாதான நடவடிக்கைகளில் சிறுபான்மையினரின் உரிமைகள்

## ஆய்வுப்பட்டறையில் பல்வேறு தரப்புகள் பங்கேற்பு

(தென்மராட்சி)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ''அனைவருக்கும் மனித உரிமைகள்'' திட்டத்தின் கீழ் சமாதான நடவடிக்கைகளில் சிறுபான்மையினரின் உரிமைகள் எனும் தலைப்பிலான ஆய்வுப் பட்டறை நேற்றையதினம் யாழ். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவினைச் சேர்ந்த பி. நிர்மனுசன் தலைமையில் நடை பெற்ற இப்பட்டறையில் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகரா வரவேற்புரையை நிகழ்த்தினார்.

இவ் ஆய்வுப்பட்டறையில் அரசியலமைப்பு சபையின் உறுப்பினரான சட்டத்தரனி ஆர். சி. கருணாகரன், சட்ட இணைப்பாளர் எம். றெமாடியஸ் சட்டத்தரணி எஸ். ரவீந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கியிருந்தனர்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி. சார்பில் சாள்ஸ் அலெக்சாண்டர், புளொட் சார்பில் எஸ்.இருதயராஜன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.சார்பில் த.சுபத்திரன், க.சிவராசா ரெலோ சார்பில் விந்தன் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பாளர் கவியன்பன், தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் செல்லன் கந்தையன், காங்கிரஸ் சார்பில் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் பொது அமைப்புகளின் சார்பில் சு.பரமநாதன், வண.பிதா ஏ.ஜே. பேர்னாட் அடிகளார் உட்பட சுமார் 75 பேர் பங்கு பற்றியிருந்தனர்.

இவ் ஆய்வுப்பட்டறையில் மத ரீதியான சிறுபான்மையினர் அரசியல் ரீதியிலான சிறுபான்மையினர், சாதி ரீதியிலான சிறுபான்மையினர் மற்றும் பெண்கள் குழந்தைகள் ரீதியிலான சிறுபான்மையினர் ஆகிய நான்கு தலைப்புகளில் குழுநிலை விவாதங்கள் இடம் பெற்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் ஒன்றாக பங்கு கொண்ட முதலாவது ஆய்வுப் பட்டறை இது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-77)

# சமாதானக் கிண்ண இறுதிச் சுற்றுப்போட்டி

(கொழும்பு)

'சமாதானக் கிண்ண இறுதிச் சுற்றுப்போட்டி' கொழும்பு றோயல் கல்லூரி மைதானத்தில் நாளை நடை பெறவுள்ளது.

இதற்கு கொழும்பு றோயல் கல்லூரி, யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகள் தெரிவாகியுள்ளன.

சமாதான கிண்ண முதற் சுற்று கொழும்பு றோயல் கல்லூரி மூன்று ஆட்டங்களில் விளையாடி மூன்று ஆட்டங்களிலும் பெரு வெற்றியீட்டியுள்ளது. யாழ். மத்திய கல்லூரிக்கு எதிரான போட்டியில் 9 இலக்குகளாலும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு எதிரான போட்டியில் 7 இலக்குகளாலும் சென். பற்றீக்ஸ் கல்லூரிக்கு எதிரான 190 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மூன்று ஆட்டங்களில் விளையாடி 2ஆட்டங்களில் வெற்றியீட்டியுள்ளது. சென். பற்றீஸ் கல்லூரிக்கு எதிரான போட்டியில் 13 ஓட்டங்களாலும் யாழ். மத்திய கல்லூரிக்கு எதிரான போட்டியில் 14 ஓட்டங்களாலும் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ-55)

## கொள்ளைக் கோஷ்டித் தலைவர் கைது

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தில் கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த கோஷ்டி ஒன்றின் தலைவன்ர மீகாதென்ன பொலிஸார் நேற்று முனதினம் கைது செய்துள்ளனர்.

இந்நபரிடம் இருந்த கைக்குண்டு மற்றும் துப்பாக்கிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத தகவலை அடுத்தே இந் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்துக மஜிஸ்திரேட் மகிந்த பின்தெனிய முன்னனிலையில் சந்தேக நபரை பொலிஸார் ஆஜர் செய்த போது அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (உ-8)

# முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டி டாக்காவில்

(டாக்கா)

தென்னாபிரிக்கா,இந்தியா பங்களாதேஷ் ஆகிய அணிகள் பங்கு பற்றவுள்ள முக்கோண கிரிக்கெட் சுற்றுப்போட்டி பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் எதிர் வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டிக்கான இந்திய கிரிக்கெட் அணி அடுத்த வாரம் தேர்வு செய்யப்படும் என இந்திய கிரிக்கெட் வாரியச் செயலர் எஸ்.கே. நாயர் தெரிவித்துள்ளார்.

இச் சுற்றுப்போட்டியின் அனைத்து ஆட்டங்களும் டாக்காவில் பங்காபந்து விளையாட்டரங்கின்பகல்இரவு ஆட்டமாக நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்டவிபரம் வருமாறு;

ஏப்.11:இந்தியா-பங்களாதேஷ், ஏப்.13:இந்தியா-தென்னாபிரிக்கா, ஏப்.14:தென்னாபிரிக்கா-பங்களாதேஷ், ஏப்.16: இந்தியா- பங்களாதேஷ், ஏப.17: தென்னாபிரிக்கா- பங்களா தேஷ் ஏப்18: இந்தியா- தென்னா பிரிக்கா,ஏப்.20: இறுதியாட்டம்,ஏப்.21: இறுதியாட்டத்துக்கான மாற்றுநாள். (உ-55)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்க அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சியுடன் விளையாட்டுக் கழகம நடத்தி வரும் லீக் முறையிலான தாச்சிச சுற்றப்போட்டியில் இன்று பி.ப. 4.30 மணிக்கு கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில்,

உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கட்டுடை விநாயகர் விளையாட்டு கழகமும்விளையாடவுள்ளன. (உ-10)

### கல்வி விடுமுறை பெறாமல்

# பட்டப் படிப்பு மேற் கொள்ளும் ஆசிரியர் மீது சட்ட நடவடிக்கை


(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் முறையாக கல்வி விடுமுறை பெறாமல் பல்கலைக் கழகங்களில் உள்வாரி பாட நெறிகளைத் தொடர்வார்களாயின் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி சட்டதிட்டங்களை மீறி பல ஆசிரியர்கள் பல்கலைக் கழகங்களில் உள்வாரி மாணவர்களாக கல்வா பயில்வதாக மாகாணக் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதையடுத்து வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு கல்வி பயிலும் ஆசிரியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இச் சுற்றறிக்கையில் இவ்வாறு கல்வி பயிலும் ஆசிரியர்களுக்கு எதிராகவும், அதற்கு துணையாக இருக்கும அதிபர்களுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிட்டுள்ளார். (உ-8)



யாழ்.நகர பருதியில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சி கண்டனங்கள் மத்தியில் தொடர்கிறது. க.பவன்

# ஏ-9 பாதை

## வெள்ளி முற்றம்

நான் பாதி நித்திரை! மழையோ கடும் விழிப்பு!!

நினைவுகளில் கடந்து போன இரவின் துயரங்கள் மீண்டும் மீண்டும் வந்து கவலை, கோபம், வெறுப்பு, சலிப்பு, சோர்வு ஆகிய கவலை உணர்வுகளை ஒருங்கே தோற்றுவிக்கின்றன.

கோடை மழையின் இடிகூட இன்னும் பழைய ஷெல் குண்டுகளின் இடிகளாகவே இதயத்தை தாக்கும் போது அது இடையிடைத் துடிப்பதை மறந்து போகிறது. இடையிடை அது மிகப் பலமாகத் துடிப்பது என் காதுகளுக்குக் கேட்கிறது. நான் திடீரென இதய நோயாளி ஆகிவிட்டேனா?

ஆகிவிடக் கூடாது. யாழ்ப்பாணம் போய் என் வீட்டைப் பார்த்துக் கொழும்புக்குத் திரும்பி வரும் வரையாவது என் இதயம் தொடர்ந்து துடிக்க மறந்து விடக் கூடாது.

ஏ-9 பாதை திறந்து பல மாதங்களாகி விட்டன. பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தப் பாதையூடு போய் வந்துகொண்டிருக்கிறார்கள். வயது அறுபது ஆகிவிட்டாலும் எனக்கும் ஒரு ஆசை வந்ததை நீங்கள் யாரும் தவறு என்று கூறிவிட மாட்டீர்கள்.

1990 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் வெளிக்கிட்டது தான். கடந்த பன்னிரண்டு வருடங்களாகத் தெல்லிப்பழைச் சந்திக்கு அருகிலே அம்பனை றோட்டில் இருந்த எங்கள் அழகிய வீடு எனக்கு மனக் கண்ணில் மட்டும் தான் காட்சியாகியது. ஒரு முறை போய்ப் பார்த்து வந்துவிட வேண்டும். யூனியன் கல்லூரி தன் சொந்த இடத்திற்குப் போய்விட்டதாம். அந்தக் கல்லூரியில் பிள்ளை ஒன்றை சேர்க்கப் போவதாகச் சொல்லி போய்ச் சந்தியில் நின்று பார்த்தாலும் என் வீடு தெரியும். எனது உழைப்பில் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கட்டிய வீடு.

'யாழ்-கொழும்பு பஸ் சேவை' "உங்கள் ஆசனங்களை இங்கே பதிவு செய்யலாம்" இத்தகைய எழுத்துக்களைக் கொண்ட அட்டைகள் காலி வீதி முழுதும் தொங்கின. "சொகுசு பயணச் சேவை- 1000/= மட்டுமே" என்று காட்டிய அட்டைகளைக் கடந்து, "இலகு பயணச் சேவை- 850/= மட்டுமே" என்று சுட்டிய அட்டை தொங்கிய கடைக்குள் புகுந்தேன். இவன் கொஞ்சம் நேர்மையானவனாக இருப்பான் போலும் அதனால் தான் மற்றவர்கள் எல்லாம் 1000/= போட இவன் 850/= போட்டிருக்கிறான் என்றது ஒரு மனம்.

நம்பிக்கையே வாழ்வின் அடிப்படை. அட்டை தொங்கிய கடையின் பெயர் சிவப்பு ஒளியில் பளபளத்தது. "சுது டிரவல்ஸ்!"

"தம்பி நான் யாழ்ப்பாணம் போக வேணும்... "

"ஓம்- தாராளமா... எப்ப போகப் போறியள்?"

"திங்கட்கிழமை"

"கடைக்கு வாறியளோ? வீட்டிலை வந்து ஏத்திறதோ"

"வீட்டில வந்து ஏத்துவியளோ?"

"உங்களைக் கொழும்பு வீட்டிலை வந்து ஏத்தி, யாழ்ப்பாண வீட்டிலை இறக்குவம்..."

"மிச்ச நல்லது..."

"இரவு எட்டு மணிக்கு றெடியா நில்லுங்கோ... உங்கடை விலாசத்தை ஒருக்காச் சொல்லுங்கோ... ரெலிபோன் நம்பரையும் சொல்லுங்கோ"

"ஏன் ரெலிபோன் நம்பர்?"

"வர முந்தி ஃபோன் பண்ணி விட்டு வருவம்..."

"ஆ... ஆ... சரி சரி..."

"அட்வான்ஸ் எவ்வளவு தாறியள்?"

"மொத்தம் 850 தானே?"

"இல்லை இல்லை அது கடையிலை ஏத்தி பஸ்ராண்டிலை இறக்கிறதெண்டால் தான் எண்ணூற்றைம்பது. வீட்டில ஏற்றி வீட்டில இறக்கிறதென்றால் ஆயிரத்து ஐம்பது..."

"அப்ப வேறை கடையில ஆயிரம் போட்டிருக்கு"

"அதெல்லாம் பெரிய பஸ். உங்களை வீட்டில விடாது. எங்கடை ஹயேஸ். நாங்கள் படலையிலை விடுவம்..."


"சரி... சரி... அப்ப ஐந்நூறு அட்வான்ஸ் தாறன்..."

"சரி போட்டு வாங்கோ... திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு றெடியா நில்லுங்கோ..."

கீழை அடிவானைக் கிளறியபடி கிளை விட்டுப் பின்னால் கிளை ஒன்று தோன்றி அழிந்தது. வானம் சீறியபடி நீர்க் கொடிகளை நிலத்தில் படர விட்டது. வீதியில் குறுக்கே இருந்த அலங்கார வளைவில் எழுத்துக்கள் தெரியவில்லை. மனதில் மீண்டும் எண்ண வளைவுகள்!

திங்கட்கிழமை 8 மணி எப்போது வரும் என்று பார்த்திருந்தேன். மகள் தந்த இடியப்பப் பார் சலையுச் உடுப்புப் பெட்டியில் வைத்துக கொண்டு ஏழரைக் கெல்லாம் ஆயத்த மாகி விட்டேன். ஏழு நாற்பந்தைந்துக்கு பாக்குடன் (bag) முன் ஹோலில் வந்து அமர்ந்து விட்டேன். இடையிடை எழுந்து நின்று றோட்டைப் பார்த்துக் கொண்டேன். ஏழுஐம்பது, ஐம்பந்தைந்து, ஐம்பத்தெட்டு, ஐம்பத்தொன்பது... எட்டு மணி! வான் வரவில்லை.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றதால் போலும் எதையும் குறித்த நேரத்தில் விநாடி தவறாமல் எதிர்பார்க்கும் பழக்கம் எனக்கு! இது என்ன போட்டிப் பரீட்சையா, பொதுப் பரீட்சையா நேரம் தவறாமல்



ஆரம்பிக்க? என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

எட்டுப்பத்து, பதினைந்து! பொறுமை இழந்த நான் "சுது டிரவல்ஸுக்கு கோல் எடுத்தேன்"

"ஹலோ... சுது டிரவல்ஸா? ஆ... இன்னும் வான் வரேல்லை... அதுதான்... "

"வெளிக்கிட்டுட்டுது வந்துகொண்டிருக்குது..." போனை வைத்தேன். பையைத் தூக்கி வெளியில் வைத்து வீட்டில் எல்லாருக்கும் "பை" சொல்லி றோட்டில் நிற்கிறேன். வந்துவிடும். ஆ... எட்டு இருபத்தைந்து, முப்பது!

"ஒருவேளை ஏமாத்தி விடுவானோ? இன்னொரு முறை எடுத்துப்பாப்பம்"

"தம்பி... எட்டு நாப்பது ஆகுது. வான் வரேலை..."

"இப்பதான் தெஹிவளையில ஆக்களை ஏத்துது- அடுத்து உங்களிட்டை தான் வரும். அவசரப்படாதைங்கோ"

"ஆ... சரி...சரி..."

றோட்டில் நின்று காலும் வலித்தது, கல் ஒன்றில் உட்காரப் போன வேளை அது வந்து சேர்ந்தது. நேரம் ஒன்பது மணி!

"அப்பாடா!"

பாக்கை எடுத்து டிக்கியில் போட்டு விட்டு உள்ளே ஏறினேன். வேறு பலர் ஏறியிருந்தார்கள். "பின்னே சென்றால் குலுக்கிய டிக்கும் என்று மகள் சொல்ல இரண்டாவது சீற்றில் அமர்ந் தேன். ஒன்பது பேர் மட்டும் கொள்ளக்கூடிய சிறிய வான். இனியென்ன கதை முடிந்தது- யாழ்ப்பாணம் போய் வந்திருப்பீர்கள்" என்கிறீர்களா?

இனித்தான் கதையே தொடங்கப் போகிறது. டிக்கியில் பாக் போட்டேன் என்று சொன்னேனா? டிக்கி திறக்க வந்தபோது டிரைவரைப் பார்த்தேன். இளைஞன்- என்றாலும் ஏனோ அவனது முகத்தைப் பிடிக்கவில்லை எனக்கு. ஏன் அவனைப் பிடிக்க வேண்டும்? நான் அவனை திருமணம் செய்யப் போகிறேனா அல்லது எனக்கு மருமகனாக்கிக் கொள்ளப் போகிறேனா? இரண்டுமில்லை.

காலி வீதியில் இறங்கி தெஹிவளைப் பக்கம் திரும்பினான். பொக்கற்றிலிருந்து பேப்பர்களை எடுத்து ஏதோ விலாசங்களைப் பார்த்தான். ஏதோ ஒரு ஒழுங்கையில் நுழைந்தான். திரும்பி வந்தான். யாரையும் ஏற்றவில்லை. ஒரு பெற்றோல் செட்டுக்கு முன் நின்றான். பெற்றோல் அடித்துக் கொண்டான். சுது டிரவல்ஸுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தினான். அங்கு ஒருவர் ஏறிக் கொண்டான்.

கடையில் இருந்து வந்த பையன் ஒருவன் எல்லாரிடமும் மீதிப் பணங்களைப் பெற்றுக் கொண்டான். நான் அட்வான்ஸ் கொடுத்தது போக மீதி ஐந்நூற்று ஐம்பதையும் கொடுத்தேன். இப்போது நேரம் ஒன்பதேமுக்கால். காலை பத்து மணிக்காவது யாழ்பபாணம் போகலாம் என்பது எனது கணக்கு!

வான் ஓடத்தொடங்கியது.

"நான் தான் காலமை யாழ்ப்பாணத்திலை இருந்து ஓடி வந்தனான். பிறகும் என்னைத் தான் போகச் சொல்லினம். நான் நித்திரை தூங்கினால் உங்கடை உயிர் பறக்கும்..."

டிரைவர் பக்கத்தில் இருந்த பயணியிடம் புறுபுறுத்தான். எனக்குக் கொஞ்சம் திக்கென்றது. வானை ஒரு கோயிலுக்கு அருகில் நிறுத்தினான். இறங்கிப் போய் கும்பிடுகிறான். நல்லது தான் கும்பிடட்டும்.

என்ன ஏது? இவ்வளவு நேரம் கும்பிடுகிறான்? அரைமணி நேரமாகிறது- ஒருவாறு திரும்பி வந்தான். நேரம் பத்தரை. வான் இப்போது கொட்டாஞ்சேனைக்குள் நுழைகிறது. சில்லுக்குக் காத்துப் போகிறது. யாரோ வேண்டுமென்று குத்தியிருக்கினம்" என்றான்.

ஹான்ட் ஃபோனைச் சுழற்றினான். "மச்சான் சில்லுக்குக் காத்துப் போகுது. ஓட ஏலாது. மறு பக்கம் "சுது டிரவல்ஸ்" ஆக இருக்கலாம். அங்கு சொல்லப்பட்ட பதில் எனக்கு கேட்காது தானே!"

"ஆ... சரி... சரி..." என்று ஃபோனை அடித்தான். பொக்கற்றில் திணித்தான்.

தனியான ஒரு இடத்தில் ஓரமாக நிறுத்திச் சில்லைக் கழற்றி மாற்றினான். எல்லோரும் இறங்கிக் கீழை நில்லுங்கோ" என்றான். பணிந்தோம். சில்லு மாற்றி முடிய மேலும் ஒரு அரை மணி நேரம். ஏறினோம் அவனுடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.

"எங்கை வந்த நசல்!" "சனியன் பிடிச்ச வான்" அடுக்கிக் கொண்டே வந்தான். மீண்டும் வான் நின்றது. ஹான் ஃபோனை எடுத்து நம்பரைச் சுழற்றினான்.

"மச்சான் சில்லு மாற்றினனான். பிறகு மற்றச் சில்லும் போகுது. ஓட ஏலாது வேறை ஒரு வான் அனுப்பு... நான் இங்க கொட்டாஞ்சேனையிலை ஆள் ஏத்த வேண்டிய இடத்துக்குக் கிட்ட வந்திட்டன். இல்லை இன்னும் ஏத்தேல்லை. வேற ஒரு பஸ் அனுப்பு... என்னட்டைக் காசில்லை நீதானே எல்லாரிட்டையும் வேண்டினனி..."

மீண்டும் அடித்து மூடிப் பொக்கற்றில் அடைந்தான்" ஆக என்னைப் பேயன் என்று நினைக்கினம் "தனக்குள் முணுமுணுத்தான். அவனுடைய ஹான்ட் ஃபோன் அலறியது.

'ஹலோ... ஆர்...ஓ... உங்களைத் தான் ஏத்த வாறன். பகத்திலை வந்திட்டன். எட்டு மணிக்கு வாறதெண்டதோ... அதுக்கு நான் என்ன செய்யிறது... நாளைக்குத் தானே யாழ்ப்பாணம் போய்ச் சேருகிறது... ஏன் அவசரப்படுறியள்... வாறன்... நில்லுங்கோ..."

ஊர்ந்து சென்று ஒரு வீட்டின் முன் நின்றான். மூவர் வந்து ஏறிக் கொண்டனர். ஒருவர் நன்றாகக் குடித்திருந்தார்.

"இப்பானோ எட்டு மணி?" அவர் குரல் உயர்த்த "வாயை மூடிக்கொண்டு ஏறுங்கோ- உங்கள் தரவளியை ஏத்தாமல் போனால் தான் சரி..." இவன் அதைவிட உயர்த்தினான். நான் முதல் முறையாகக் கடவுளைக் கும்பிட்டேன்.

"டயரில காத்து இப்ப நிக்குது போல" யாருக்கும் கேட்காமலே தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இப்போது வேறொரு பஸ் ஏற்றப்பட்ட மனிதர்களுடன் அவ்விடம் வந்தது.

"என்ன? பிரச்சினையாம்? அப்ப ஆள்களை இதில விடன்..."

நாங்கள் எல்லோரும் இறங்க ஆயத்தமாக அவன்- எனக்குப் பிடிக்காத முகத்தையுடைய அவன்- சொன்னான்.

"இல்லை இப்ப பிரச்சினை இல்லை. காத்து அடிச்சனான் நிக்குது. நான் ஓடிக்கொண்டு போறன் நீங்கள் போட்டு வாங்கோ..."

நாங்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் நிற்க அந்த பஸ் போய் விட்டது. நேரம் இப்போது பன்னிரண்டு மணி.

"மத்தியானச் சாப்பாட்டுக்குத் தான் வீட்டை போவம் பொல" ஒருவர்-பயணிதான் கூறிக்கொண்டார்.

வான் புறப்பட்டது. வத்தளை வரை வந்தது. மீண்டும் நின்றது.

"மூதேசி வான் மீண்டும் காத்துப் போகுது..."

மீண்டும். ஹான்ட் ஃபோன் உரையாடல்.

"மச்சான் ஒண்டும் செய்ய ஏலாது. வேறை பஸ் அனுப்பு..." அவன் இறங்கி நின்று கதைக்கிறான். பயணிகள் தமக்குள் புறுபுறுக்கின்றார்கள். நான் இறங்கி அவனருகில் சென்றேன்.

"தம்பி... இதென்ன நாடகம்... எங்களுக்கு விளங்கேல்ல. உமக்கும் முதலாளிக்கும் ஏதும் பிரச்சினை இருந்தால் நாளைக்கு வந்து பேசித் தீர்க்கலாம். நாங்கள் காசு குடுத்து உங்களை நம்பி வந்த ஆக்கள். வீட்டை போக வேணும்..."

அவனது கண்கள் கோவைப் பழம் போலச் சிவந்தன. "எல்லோரும் பேசாமால் இருக்கினம். இவ ஒரு பொம்பிளை கதைக்க வந்திட்டா- நடுக் காட்டிலை காத்துப் போய் நிண்டா என்ன செய்யிறது?"

"அப்ப முதல் வந்த பஸ்ஸிலை எங்களைப் போக விட்டிருக்கலாமே?"

"அது டிரைவர் நல்ல வெறி. அவனோடை உங்களை விட்டிட்டுப் பிறகார் மறுமொழி சொல்லுறது?"

"எங்களிலை உமக்கு அக்கறை எண்ட படியால் தான் இரவு ஒரு மணியாகியும் வான் கொழும்பை விட்டு நகரேல்லை... இருக்கட்டும்... ஒண்டும் வேண்டாம்... எங்களைக் கொண்டு போய் பஸ் ஸ்ராண்டிலை விடும். விடியப்பறம் மூண்டு மணிக்கு வவுனியா பஸ் இருக்கு. நாங்கள் அதில போறம்..."

இப்போது ஏனைய பயணிகளும் என்னோடு சேர்ந்து உறுதிபடக் கதைக்கத் தொடங்கினர். மது போதைப் பயணிதனது பிரசங்கத்தை ஆற்றிக் கொண்டிருந்தார்.

"ஒரு அங்குலமும் ஓட ஏலாது. ஏனெண்டால் சில்லில காத்தில்லை"

"அப்ப இந்தச் சாமத்திலை நாங்கள் இதில நிண்டு என்ன செய்யிறது"

மீண்டும் ஹான்ட் ஃபோன் சுழற்றல்.

"மச்சான் இஞ்ச மனுசி ஒண்டு என்னைப் பேசுதடாப்பா: நீ என்ன வான் அனுப்புறியோ?"

நேரம் இரவு இரண்டு மணி.

"தம்பி... நீர் ஒரு முடிவைச் சொல்லும். எங்கடைகாசுகளைத் தாரும். நாங்கள் வேறுவழி பார்க்கிறம்...."

"என்னட்டை எங்கை இருக்குக காசு? நீங்கள் என்னட்டையே தந்தனீங்கள்? முதலாளிட்டை எல்லோ கொடுத்தனீங்கள்? அவரிட்டைக் கேளுங்கோ..."

தற்செயலாக அந்தவழியால் வந்த வேறொரு பஸ்ஸைப் பயணிகள் மறித்தனர். புதிதாக ஆயிரம் ரூபா கொடுத்து ஏறி உள்ளே அமர்ந்தனர்.

அந்தப் புதிய பஸ்தான் இப்போது கிளிநொச்சியை அடைந்திருக்கிறது. நேரம்

**கோகிலா மகேந்திரன்**

மாலை நாலு மணி. புளியங்குளம் முதல் கிளிநொச்சி வரை லாரி இறைத்த மண்ணைக் கழுவ கோடை மழை பொழிகிறது.

"சுது டிரவல்ஸ்" என்ற பெயரைச் "சூது டிரவல்ஸ்" என்று மாற்றி எழுதும்படி கோரிக்கை விடுக்கும் கடிதத்தை எப்படி எழுதலாம் என்ற சிந்தனையுடன் நான் பாதி நித்திரையில் மூழ்கிப் போகிறேன். மழை கடும் விழிப்பு

இரவுச் சாப்பாட்டிற்கு வீடு போனல் போதும்! வீடு இருந்தால் தானே!!

# புதிய முகாம் அமைக்கும் முயற்சி

# ஒப்பந்தத்தைமீறும் செயல்

## கஜேந்திரக் குமார் எம்.பி. பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் கேந்திரப் பகுதியில் படை முகாம் அமைக்கும் நடவடிக்கையைக் கண்டித்தும் அதனைத் தடுத்து நிறுத்தவும் கோரி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திர குமார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தற்பொழுது இராணுவத்தின் பாவனையில் உள்ள அரசாங்கக் கட்டடங்கள், தனியார் வாழ்விடங்கள் என்பனவற்றை விட்டு இராணுவம் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதென்று அறிகின்றேன்.

அந்த வகையில் இராணுவம் மாற்று இடங்களை தேடுவதாகவும் யாழ்ப்பாணத்தின் இதயப் பகுதிகளான பழைய நகர மண்டப வளாகம், யாழ்ப்பாணக் கோட்டையும் அதன் சுற்றுப் புறமும், பழைய யாழ்ப்பாண் வாடி வீட்டு வளாகம், பழைய நீதிமன்ற வளாகம், சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா இப்பிரதேசத்திலுள்ள வேறு சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கி முகாம் அமைக்கத் திட்டமிடுவதாகவும் அறிகின்றேன்.

இராணுவ முகாமை மாற்றி அமைக்கத் தெரிவு செய்த காணிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் திட்டமிட்ட குண்டு வீச்சால் அழிக்கப்படும் வரை முக்கிய ஸ்தாபனங்களாகச் செயற்பட்டு வந்தன. அவை தற்பொழுது குடா நாட்டின் வேறு பகுதிகளில் இடம்பெயர்ந்தோ அல்லது காணி கட்டட வசதிகள் இன்மையால் செயற்படாதோ உள்ளன.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் 25 தொகுதியின் படி சம்பந்தப்பட்டவர்களின் பாதுகாப்பு ஒழுங்குகள் மற்றும் சோதனை நிலையங்களின் அமைப்புக்களை குறிப்பாக குடிசன அடர்த்தியுள்ள நகரங்கள், பட்டினங்களை பரிசீலனை செய்து பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தடுப்பதற்கான முறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் ஒப்பந்தத்தின் குறிக்கோளையும் முற்றாக மீறுவதாக அமைகின்றது. அழிக்கப்பட்ட கட்டடங்களை புனரமைப்புச் செய்து ஒரு காலத்தில் இந்தக் காணிகளில் இருந்த அமைப்புக்கள் தமக்குரிய இடத்தில் செயற்படச் செய்ய வைக்க வேண்டும்.

இதை விட்டு தற்காலிகமாகவோ அல்லது வேறு விதமாகவோ இவைகளை இராணுவ முகாம்களாக்குவது இயல்பு நிலையினை கேள்விக்குரியதாக்குகின்றது.

ஆகயினால் பாதுகாப்பு அமைச்சின் தற்காலிகமாகவோ வேறு விதமாகவோ எடுக்கும் இப்படியான முயற்சிகளை நிறுத்தும்படி ஆணித்தரமாக விண்ணப்பிக்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# 1000 பரசூட் வீரர்களை அமெரிக்கா வட ஈராக்கில் தரையிறக்கியது

## போர்த்திறன் மிக்க 4 வது படைப்பிரிவும் விரைகிறது

(வாஷிங்டன்)

**முன்னேற முயலும் கூட்டுப்படைகள் மீது ஈராக்கியர் கடுமையான எதிர்த்தாக்குதலைத் தொடர்ந்திருக்கும் அதேவேளை ஒரு முக்கிய திருப்பமாக ஈராக்கின் வடக்கின் குர்த்திஷ் மக்கள் வாழும் பகுதியில் 1000 பரசூட் படைகளை அமெரிக்கா இறக்கியுள்ளது.**

**போர் நுட்பங்களில் திறமை பெற்ற 4 வது படைப்பிரிவு உட்பட 30 ஆயிரம வீரர்களை அமெரிக்கா வளை குடாப்பகுதிகளுக்கு அனுப்பியுள்ளது.**

**இதற்கிடையில் துருக்கிய படைகள் வடமுனைகளில் நுழைவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி அமெரிக்காவின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.**

**இதேசமயம், ஈராக்மீதான போருக்கு ஒரு முடிவுகட்ட ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது ஈராக்பாதுகாப்புச்சபையில் நேற்று வற்புறுத்தினர்.**

ஈராக் மீதான யுத்தம் சில மாதங்களாவது நீடிக்கலாம் என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தப் போரில் தற்போதுள்ள படைபலத்தைவிட மேலும் அதிக வீரர்கள் தேவைப்படுவார்களென அவர்கள் நம்புவதாக வாஷிங்டன் போஷ்ட் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பத்திரிகையின் இணையதளத்தில் பெயர் குறிப்பிடப்பாத அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே போர் நுட்பத்தில் வல்லமை பெற்ற 4 வது காலாற்படைப் பிரிவு உட்பட 30 ஆயிரம் வீரர்களை, அமெரிக்கா வளைகுடாப் பகுதிக்கு அனுப்பியுள்ளது.

ஈராக்கின் வடபகுதியில் அமெரிக்காவின் துணை இராணுவப் படைவீரர்கள் ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### வழமைக்கு மாறாக குண்டுச் சத்தம்

ஈராக் போரின் 8 வது நாளான நேற்று பக்தாத் நகரை வழமைபோல அன்றி குண்டுச் சத்தங்கள் உலுப்பியுள்ளன.

குடியிருப்புப்பகுதிகளில் 30 இற்கும அதிகமான குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்டதாகவும் இதன்போது 15 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தெற்கே, நசீரியாநகரிற்கு அமெரிக்க படைகளின் நிலைகள் மீது ஈராக்கிய துருப்புகள ஏவுகணை தாக்குதல்கள் நடத்தியுள்ளன.

### பாதுகாப்புச்சபை 6 மணிநேரம் நடந்தது

அரபுலீக் நாடுகளின் வேண்டுகோளிற்கிணங்க நேற்று கூட்டப்பட்ட ஐ.நா. பாதுகாப்புச்சபைக் கூட்டம் 6 மணித்தியாலங்களாக இடம்பெற்ற விவாதங்களின் பின்னர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### இந்தியக் கருத்து

ஈராக்கியமக்களுக்கு நிலையான எதிர்காலம் கிடைக்கும் வகையில் ஐ.நா.பாதுகாப்புச் சபை ஒன்று பட்டு செயற்பட வேண்டுமென இக்கூட்டத்தில் பங்கு கொண்ட ஐ.நாவிலுள்ள இந்திய தூதுவர் விஜய் நம்பியார் வலியுறுத்தியிருந்தார்.

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கத்தலைமையில் எடுக்கப்படுவது நியாயமற்றது என்று கூறிய அவர் உடனடியாக இச் சண்டைக்கு முடிவு எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

### போருக்காக ஒதுக்கீடு அங்கீகாரம்

இதனிடையே ஈராக் மீதான போருக்காக 2 ஆயிரத்து 200 கோடி டொலர் ஒதுக்கும் வரவு, செலவுத் திட்டத்துக்கு அமெரிக்க செனற சபை ஒப்புதல் அளித்துள்ளது.

குடியரசுக கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள செனற்றில் இத்திட்டத்துக்கு ஆதரவாக 56 வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் கிடைத்துள்ளன.

### போருக்கு முடிவு கட்ட ஈராக் கோரிக்கை

கூட்டத்தில் உரையாற்றிய ஈராக்கிற்கான தூதுவர் மொகமட் அல்டாரி அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையை ஐ.நா.கண்டிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவையும் அதன் கூட்டுப்படைகளையும் இந்த ஆக்கிரமிப்புக்கு பொறுப்பாக்கவேண்டும் என்று கூறிய இவர் இந்தப் போருக்கு முடிவு கட்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசிய ஈராக்கிய தூதுவர்,

அமெரிக்காவின் படையெடுப்புத் தான் உண்மையான பிரச்சினை. இதனை முதலில் தீர்க்க வேண்டும். மனிதாபிமான உதவி ஒரு பிரச்சினை இல்லை என்று குறிப்பிட்டார்.

தற்போது தொடுக்கப்பட்டுள்ள ஈராக் மீதான போர் விரைவில் முடி வடையப் போவதில்லை என்றும், கடுமையான போருக்கு கூட்டணிப் படைகள்ஆயத்தமாக வுள்ளன என்றும் அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

இது பற்றி பிரிட்டிஷ்பிரதமர் ரொனி பிளேயருடன் புஷ் பேச்சு நடத்தவுள்ளார். (பி-2)

## முன்னாள் அமைச்சர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

குஜராத் மாநில முன்னாள் அமைச்சர் ஹரேன் பாண்டியா நேற்றுக்காலை அகமதா பாத்தில் வைத்து இனந்தெரியாதோரால சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

உடற்பயிற்சியை முடித்துக் கொண்டு அவர் வீட்டுக்குச் செல்வதற்காக தனது காரில் ஏறிய நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அவருக்கு அருகில் சென்று சுட்டதாக தெரிவிககப்படுகிறது. (ந.)

## ஈராக்கிற்கு உணவுப் பொருள் ஐ. நா. பொதுச் செயலர் ஆர்வம்

(நியூஜோர்க்)

எண்ணெய்க்கு உணவுத் திட்டத்தின கீழ், உணவுப் பொருள், மருந்துகள் உள்ளிட்டவற்றை ஈராக்கிறகு அனுப்பும திட்டத்தை மீண்டும் கூடிய விரைவில தொடங்க ஐ.நா. ஆர்வமாக இருக்கிறது என்று ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் கூறினார்.

ஐ.நா. கண்காணிப்புக்கு உடபட்டு, பெறறோலிய எண்ணெயை விற்பதன் மூலம் ஈராக்கிற்கு கிடைக்கும் பணத்துக்கு ஐ.நா. மூலமாக உணவுத் தானியங்களையும் மருந்து உள்ளிட்ட பொருள்களையும் வாங்க அனுமதிப்பதே "எண்ணெய்க்கு உணவுத்" திட்டமாகும். ஈராக் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் இராணுவத் தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்னதாக அத்திட்டத்தின் கீழ் பொருள்களை அனுப்புவது நிறுத்தப்பட்டுவிட்டது. அதை மீண்டும் கூடிய விரைவில் தொடங்க வேண்டும் என்று கூறியுள்ளார் கோபி அனான்.

ஆனால், தற்போது ஈராக்கில் உள்ள பகுதிகள் யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும்சரி, அவர்கள் மூலமாகக்கூட அப்பொருள்களை அனுப்ப ஐ.நா. தயார் என்றும் அத்திடடத்தைச் செயல்படுத்துவதற்கான தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டு உள்ளது.

அதற்கு பிரான்ஸ், ரஷயா, ஈராக் ஆகிய நாடுகள் வெவ்வேறு காரணங்களுக்காக கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் மூலமாக ஈராக் மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கினால், ஈராக் மீது அவை படையெடுத்துள்ளதை சரி என்று ஒப்புக் கொள்வதாக ஆகிவிடும். எனவே அமெரிக்கா மூலமாக ஈராக் மக்களுக்கு உதவிப்பொருள்களை வழங்கக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்துள்ளது பிரான்ஸ். ஐ.நா. பொதுச் செயலருக்கு கூடுதல் அதிகாரங்களை அளிப்பதை ரஷ்யா எதிர்க்கிறது. (பி)

# போர்க்களமாகியுள்ளது ஈராக்

உலகின் பிரதான எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்று ஈராக். ஆனால், 1980ல் ஈரானுடன்நடந்த போரின் போது அதன் எண்ணெய் உற்பத்தி வசதிகள் நாசமாக்கப்பட்டுவிட்டன.

மக்களில் பெரும்பாலானவர்களும ஏழைகள் 10 பேரில் 4 பேரே படிக்க வாசிக்கக்கூடியவர்கள். பெரும்பான்மையானவர்கள் விவசாயிகள் அல்லது இடம்விட்டு இடம்நகரும்கால்நடை வளர்ப்போர். பணப்பயிர் பேரிச்சை.

இடதுசாரி இராணுவ அரசு நாட்டை ஆளுகிறது மனித உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஈராக்கிற்கு கடும் எதிர்ப்பு நாடு இஸ்ரேல் - பலஸ்தீன தீவிரவாதிகள் பலர் இங்கே பயிற்சி பெற்றுள்ளனர்.

1967ஜூனில் இடம்பெற்ற அரபு - இஸ்ரேல் போரில் இஸ்ரேலை அமெரிக்கா ஆதரித்தனால் அமெரிக்காவுடனான உறவு முறிந்து போயிற்று.

இங்கே ஓடுகின்ற டைக்கிறிஸ் - யூப்பிறிட்டிஸ் பெருநதிகளுக்கிடையிலான மொசட்பொட்டேமிய சமவெளிப்பிரதேசம் புராதன சுமர் - பபிலோனியா நாகரிகத்தின் பிறப்பிடமாகும்.

வடகிழக்கில் உள்ள மலைப்பிரதேசம் குர்த்திஸ் மக்களின் தாயகம்.

முதலாவது உலக யுத்தத்தின் போது மொக்காவின் ஆளுநர் ஹுசைனின் ஆதரவுடன் பிரிட்டன் இதன்ஆட்சியை கைப்பற்றியது. அதிலிருந்து அந்நாட்டுக்கு ஈராக் என்ற பெயர் வழங்கலாயிற்று. இந்நாட்டின் தலைநகர் பக்தாத்நாட்டின்பரப்பளவு 167, 925 சதுர மைல் (434,924 சதுர கி.மீ.) பிரதான நகரங்கள் பக்தாத், பாஸ்ரா, மொசோல், கிர்குக், நாகப், ஹில்லா

**அரசு:** ஒரு கட்சி சோசலிச இராணுவ ஆட்சி இதன் ஜனாதிபதியாக 1979 முதல் சதாம்ஹுசைன் இருந்து வருகிறார். கொடிசிவப்பு வெள்ளைக் கறுப்பு நடுவில் மூன்று பச்சைநிற நட்சத்திரங்கள்.

**மொழி :** அரபு (அரசகருமமொழி) குர்த்திஸ்

**பிரதான மக்கள் பிரிவுகள் :** அரபுக்கள், குர்த்துக்கள்

**பிரதான சமயம் :** இஸ்லாம்

பிரதான பபிலோனிய எச்சங்கள், தொங்குதோட்டம் பபிலோனிய சிங்கங்கள் போன்றவை இங்கு வெளிநாடடவரை கவரும் இடங்கள்.

1920ல் உலக நாடுகளின் அமைப்பாக விளங்கிய லீக்ஒ்ப நேஷன்ஸ் (League) ஈராக்கை பிரிட்டன் மேற்பார்வை நாடாக அனுமதித்தது. ஹுசைனின் புதல்வர் பெய்சல் -I என்பவரை ஈராக்கின் அரசாக்குவதற்கு பிரிட்டன் ஏற்பாடு செய்தது. 1932ஆம் ஆண்டு லீக்ஒ்ப்னேஷன்ஸ் ஆதிக்கம முடிவடைந்தது. ஈராக் சுதந்திர நாடாக அவ் அமைப்பில சேர்ந்து கொண்டது.

1933ல் பெய்சல் காலமானதால் அவரது மகன் காஸி பதவிற்கு வந்தார். 1939ஆம் ஆண்டு அவர் விபத்தொன்றில் கொல்லப்பட்டார். காஸியின்3 வயது மகன் பெய்சல் -II வாரிசு உரிமை பெற்றார். பல நாடுகளின்கூட்டமைப்புக்கு ஆதரவாக விளங்கிய அன்றைய அரசு பிரிட்டிஷ் இராணுவ நெருக்குதலால் வீழ்ச்சியுற்றது.

1955 மேற்கத்திய ஆதரவாளரான நூரி எஸ்- சேயித் ஈராக்கின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்று துருக்கி, ஈரான், பாகிஸ்தான், பிரிட்டன் ஆகியவற்றுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்த - பக்தாத் ஒப்பந்தம் என்று அது அழைக்கப்பட்டது.

1958ல் அப்துல் கரிம் காஸெம் ஆட்சியை கவிழ்த்தார். நூரி எஸ்- சேயித்தையும் இளவரசர் பெய்சலையும் கொலை செய்தார். ஈராக்கிய குடியரசை நிறுவினார். பக்தாத் ஒப்பந்தத்திலிருந்து வாபஸ் பெற்றார்.

1963ல் இராணுவப் புரட்சி மூலம் காஸெம் வீழ்த்தப்பட்டார். அவரும் பல ஈராக்கிய கம்யூனிஸ்ட்டுகளும் கொல்லப்பட்டனர். அரபு சோஷலிச பாத் கட்சி ஆட்சியை பொறுப்பேற்றது. அப்துல் சால் ஆரிப் அதன் தலைவரானார்.

1966 ல் ஆரிப்ஹெலி விபத்தில்காலமானார். அவரது மூத்த சகோதரன் அத்துல் ரஹ்மான ஆரித் அதிபரானார்.

1967 ஸ்ரேலுடன் நடந்த போரில் ஈராக் தோல்வி கண்டதால் 1968ல் இரத்தம் சிந்திய புரட்சிமூலம் பதவி இறக்கப்பட்டார். முன்னாள பிரதமரும் புரட்சித் தலைவருமான அகம் ஹஸன் அல்-பக்கர் அதிபரானார்.

நெடுநாட்களாக சாக்ரொஸ் மலைப்பகுதியில் ஈராக்கிய அரசுக்கு எதிராக குர்த்திஸ் மக்களால் நடத்தப்பட்டு வந்த போராட்டம் பாத் அரசினால் 4 ஆண்டுகளாக சுயாற்சி வழங்குவதாக வாக்களித்ததின் பேரில் 1970 ல் முடிவடைந்தது.

1973ல் மத்தியகிழக்கில் இஸ்ரேலுகதும் அரபு நாடுகளுக்குமிடையிலான போரில் ஈராக்கும் கலந்து கொண்டு அமெரிக்காவுக்கான எண்ணெய் ஏற்றுமதியை பல மாதங்களாக நிறுத்தி விட்டிருந்தது.

சுதந்திரம் வழங்கப்படாமையால் கோபம் கொண்ட குர்த்துக்மக்கள் 1974ல் மீண்டும் போராட்டத்தில் இறங்கினார்கள். அவர்களுக்கு ஈரானின இராணுவ உதவி கிடைத்தது. ஈரானுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் காரணமாக குர்த்துக்களுக்கான உதவியை ஈரான் நிறுத்தி விட்டது. அதனால் குர்த்துப் போராட்டாம் நின்றது.

1977ல் மனித உரிமைகளுக்கான சர்வதேச அமைப்பு ஐ.நா.வுக்கு அளித்த அறிக்கையில் ஈராக்கிய அரசு குர்த்திய சிறுபான்மையினரை படிப்படியாக அழித்து வருகிறது என்று தெரிவித்திருந்தது. பல குர்த்திய கிராமங்கள் அழிக்கப்பட்டு விட்டதா கவும் ஆயிரக்கணக்கான குர்த்திஸ் மக்கள் கட்டாய தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் அங்கிருந்தும் வெளியேறிய அகதிகள் கூறியிருந்தார்கள்.

இராணுவத்துக்குள் ஊடுருவி அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு 1978ல் 21 கம்யூனிஸ்ட்டுகள் கொல்லப்பட்டார்கள்.

அதுவரை பல வருடங்களாக சோவித்தயூனியனையே ஆயுதங்களுக்காக நம்பியிருந்த ஈராக், ஆயுதங்களுக்காக பிரான்சுடனும் மேற்கத்திய நாடுகளுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தொடங்கியது.

பலஸ்த்தீனிய தீவிரவாத அமைப்புக்கள் மீதும் ஈராக் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. அவைகளிடமிருந்த 8 லட்சம் டொலர் பெறுமதியான ஆயுதங்களையும் கைப்பற்றியது.

11 ஆண்டுகள் ஆண்டதின் பின்னர் 68 வயதான அதிபர் பக்தா 1979ல் பதவி விலகினார். அவருக்குப் பின் அப்பொழுது 42 வயதாக இருந்தவரும புரட்சிக் கவுன்சிலின உபதலைவராய இருந்தவருமான ஜெனரல்சதாம்ஹுசைன் அதிபரானார். பதவி ஏற்று இரண்டு வாரங்களுக்குள் தம்மைப் பதவியிலிருந்து கவிழ்க்க சதி செய்தார்கள் என்று பல அதிகாரிகளை அவர் கைதுசெய்வித்தார். 21 பேர் கொலை செய்யப்பட்டனர். 33 பேர் சிறையில்அடைக்கப்பட்டனர். 1980ல் நடந்த (20 ஆண்டுகளுக்குப் பின்) தேர்தலில் அரபு சோஷலிசக் கட்சியின் 800 வேட்பாளர்களில் 250 பேர் ஆட்சி சபைக்கு தெரிவு செய்யப்பட்டனர். (பி)

ஈராக்கிய சில நிகழ்வுகள்



# வட-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி

## அமெ.பிரதி ராஜாங்கச் செயலர் ஆர்மிடேஜ் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் உளளூராட்சிச் சபைகளுக்குத் தேர்தல்களை நடத்துவதென்ற இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் முடிவு செய்திருப்பதற்கு அமெரிக்கப் பிரதிராஜாங்கச் செயலாளர் றிச்சாட் ஆர்மிடேஜ் பாராட்டுத் தெரிவித்துள்ளார். அந்தச்செய்தி ஊக்கமளிப்பதாயுள்ளது அது ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றியெனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க-இலங்கை வர்த்தக முதலீட்டு ஒப்பந்தத்தின் இரண்டாவது கூட்டுக்குழு மகாநாட்டில் கலந்துகொள்ளும் தூதுக்குழுவினருக்கு தலைமை தாங்கி அங்கு சென்றிருக்கும் அமைச்சர் ஜீஎல்.பீரிஸிடமும் ஆர்மிடேஜ் தனது பாராட்டுக்களைத தெரிவித்தார்.

திடீரென உணர்வு பூர்வமாக மாறிவிடக்கூடிய சூழ்நிலைகளை வெற்றிகரமாக சமாளிக்க முடிந்திருப்பதாகவும், அண்மையில் கடலில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக எழுந்திருக்கக்கூடிய உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளை இரு தரப்பினரும் மிகவும் பக்குவமாக கையாண்டு பேச்சுவார்த்தைகளுக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொண்டதாகவும் பீரிஸ் எடுத்து விளக்கினார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கி எதிர்காலத்தில் இப்படியானவை நடவாமல் பார்த்துக்கொள்வதாகவும், சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன்மாட்டின், பேர்ளின் பேச்சுக்களிலும் ஹக்கோன் பேச்சுக்களிலும் ஒரு ஆலோசகராகக் கலந்து கொண்டிருப்பதாகவும் அதனால் இவ்விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் பீரிஸ் அங்கு தெரிவித்தார். (ந)



# மீள்குடியமர்வுக்கு அனுமதிக்க ஏப்ரல் — 1வரை அவகாசம்

## தவறின் அத்துமீறி நுழைய முடிவு

(தென்மராட்சி)

கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்த நிலையில். இருக்கும் மறவன்புலவு, தனங்கிளப்பு, கைதடி,நாவற்குளியைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களை எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் அரசாங்கம் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் இப்பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் பலாத்காரமாக தமது சொந்த இடங்களில் தாமாகவே மீளக்குடியமர்வார்கள் என தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.சுப்பிரமணியம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி சுமார் இரண்டரை வருடங்களாக வாழ்க்கையில் சொல்லவொண்ணாத துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அரசாங்கமாக இக்குடும்பங்களை அங்கு மீளக் குடியமர அனுமதிக்கும் என இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கவில்லை. எமது வாழ்வை அமைக்க வேண்டியவர்கள் நாங்களே தான்.

எனவே இவ்விடயத்தில் அரசிற்கு எமது நிலைப்பாட்டினை நாம் பல தடவைகள் எடுத்து விளக்கியிருந்த போதிலும், அரசாங்கம் எம்மீது எவ்விதமான கர்சனையும் காட்ட முற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (உ-77,43)

### நகரசபைத் தலைவர் சூட்டுக்கிரை

(கோட்டை)

ஹிக்கடுவ நகரசபை காமினி பின்னதுவ சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை மதியம் 1.30 மணியளவில் திரு.பின்னதுவ தமது அலுவலகத்தில் இருந்த பொழுது மோட்டார் சைக்கிளில் வந்து இருவர் அவரைத் துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்று விட்டனர். 49 வயதான அவருக்கு 5 பிள்ளைகள் இருக்கிறார்கள். (பி)

### போதைப் பொருள்கடத்த முயன்றபெண் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருட்களைக் கடத்த முயன்ற பெண் ஒருவரை விமான நிலையப் போதைப் பொருட் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருட்களுடன் இப்பெண் கைது செய்யப்பட்டதாக விமான நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மஞ்சள் தூள் அடைக்கப்படும் போத்தல்களில் நிரப்பப்பட்டு கடத்த முற்பட்டதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)


## எக்ஸ்போ ஏவியேஷன்

இல.464, காலி வீதி,
கொழும்பு-3
தொ.பே: 074 512666
தொ.ந: 074 514700

இல.1E, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3891, 071 34 8888, 071 34 9999
தொ.ந: 021 222 3891

இல.296 A/1 காலி வீதி,
கொழும்பு-6.
தொ.பே: 01 360290, 01 360291

பயணிகளின் நலன் கருதி எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 1ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் புதிய நேர அட்டவணை பின்வருமாறு:

காலை நேர விமானசேவை - EXV 712

| விபரணம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| புறப்படல் இரத்மலானை | 06.30 | 06.30 | 06.30 | ஓய்வு | 10.45 | 08.15 | - |
| வருகை பலாலி | 07.30 | 07.30 | 07.30 | | 11.45 | 09.15 | - |
| புறப்படல் பலாலி | 08.15 | 08.15 | 08.15 | | 12.30 | 10.00 | - |
| சென்றடைதல் இரத்மலானை | 09.15 | 09.15 | 09.15 | | 13.30 | 11.00 | - |

மாலை நேர விமானசேவை - EXV 714

| விபரணம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| புறப்படல் இரத்மலானை | - | 12.45 | - | ஓய்வு | 16.00 | 16.00 | 14.00 |
| வருகை பலாலி | - | 13.45 | - | | 17.00 | 17.00 | 15.00 |
| புறப்படல் பலாலி | - | 14.30 | - | | 17.45 | 17.45 | 15.45 |
| சென்றடைதல் இரத்மலானை | - | 15.30 | - | | 18.45 | 18.45 | 16.45 |

*இலவச போக்குவரத்து
யாழ்-பலாலி-யாழ்
கொட்டாஞ்சேனை- இரத்மலானை- கொட்டாஞ்சேனை
*வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும், உள்நாட்டுப் பிரஜைகளுக்கும் ஒரே விதமான பயணக்கட்டணங்களே அறவிடப்படுகின்றது. ஒரு வழி - 2425/=, இருவழி - 4550/=

குறிப்பு:- மேற்கூறப்பட்ட புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தங்கள் பதிவுகளை மீளுறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C/5886)


# "சினி யாத்ரா"வில் இனி...



யாழ்.பல்கலைக்கழ புறநிலைப்படிப்புகள் அலகும், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விகலாசார விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சு-இலங்கை ஆசிய திரைப்படமையம் ஆகியவற்றுடன் இணைந்து திருகோணமலை மையத்தின் ஏற் பாட்டில் யாழ்.பல்கலையில் இடம் பெறும் "சினி யாத்ரா" திரைப்பட விழாவின் மூன்றாம் நாளான இன்று பி.ப 4 மணிக்கு பிரசன்னவிதானகேயின் நெறியாள்கையில் உருவான புரஹந்த கலுவற(ஓர்பூரணையில் மரணம்) என்ற சிங்கள மொழித் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இத்திரைப்படத்தின் கதைச்சுருக்கத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஓர்பூரணையில் மரணம்(புரஹந்த கலுவற) கதைச்சுருக்கம்

கடும் வரட்சியாலும் இனப்போராலும் அந்த நிலம் பீடிக்கப்பட்டுள்ளது. காட்டின் ஓரத்தில் இருக்கும் அந்த ஏரி அனேகமாக வரண்டு போயுள்ளது. அதற்கு சில மைல்களுக்கப்பால் ஏழைக்கிராம மக்களின் பிள்ளைகள் கொடிய உள்நாட்டுப் போரினால் இறந்து கொண்டிருக்கின்றனர். அந்தக குளத்தில் எஞ்சியுள்ள நீரை அள்ளிக்கொண்டிருக்கும் குருட்டு வயோதிபரான வன்னிஹாமிக்கு விரைவில் மழைவரும் என்று தெரியும். சிறிது நாட்களுக்குப் பின்னர், ஓர் பூரணை தினத்தில் இறந்து போன. அவரது மகனின் உடல் ஓர் சீல் வைத்த சவப்பெட்டியில் வைத்து இராணுவத்தினரால் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. மழை பெய்யும் அன்றைய நாளில் தான் பண்டாரவின் உடலும் புதைக்கப்படுகிறது. போரில் இறந்த மகனுக்கு நஷ்டஈடாக அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணத்தை உத்தரவாதம் செய்யும் பத்திரங்களில் கையெழுத்திடுவதற்கு வன்னிஹாமி மறுத்துவிடுகிறார்.

அவரது இளையமகளான சுனந்த தந்தையின் சொல்லை ஏற்றுக் கொண்டு ஆடைத்தொழிற்சாலையில் வேலையொன்றைத் தேடிக் கொள்கிறாள். ஆனால் அவளுடைய காதலன் சோமே, அவளுடைய விவாகமான மூத்த சகோதரி யமுனா, உளளூர் அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோர் அனைவரும் பத்திரங்களில் கையெழுத்திடுமாறு வன்னிஹாமியை நிர்ப்பந்திக்கின்றனர். பண்டார இறந்து மூன்று மாதத்திற்குப் பின்னர் வரும் வழமையான அன்னதானச் சடங்குக்கு கொடுக்க வேண்டிய உணவுக்காக எங்காவது பணம் பெற்றாக வேண்டும். செங்கற்கள் செய்யும் தனது வேலையின் மூலமாக சேமேக்கு கிடைக்கும் வருமானம் சிறுதொகையே. அவனும் முன்னர் பண்டார செய்தது மாதிரி, நல்ல முறையில் வாழ வேண்டுமானால் இராணுவத்தில் சேர்ந்து கொள்வதே சரி என்று உணர் கிறான். உள்ளூர் பௌத்தபிக்கு நாட்டுக்காகத் தன்னுயிரை விட்ட மைந்தனின் பெயரில் ஞாபகத் தூபி ஒன்று கட்டுவதற்கு விரும்புகிறார்.

வறுமையின் காரணத்தால் குருடாகிப் போன மக்களின் அழுத்தத்திற்கும் நாளாந்தம் படும் கஷ்டத்துக்கும், குண்டுகளுக்குப் பலியாவதைத் தவிர வேறொன்றும சாதிக்க முடியாத வெற்று வீரப்பிரதாபங்களுக்கும் முகம் கொடுக்கும் வன்னிஹாமி கண்கள் பார்க்கக் கூடியவற்றுக்கப்பால் தெரியும் உண்மையைத் தரிசிக்கும் தெளிந்த அறிவைக் கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய மகனின் சீல் வைத்துப் புதைக்கப்பட்டிருக்கும் சவப்பெட்டியைக் கிண்டி எடுத்து தகர்ப்பதற்காக மண்வெட்டியை எடுக்கிறார். இதன் மூலம் நஷ்டஈடு கொடுக்கப்படுவதை கோரமுடியாமல் செய்யலாமென்று அவருக்குத் தெரியும். ஆனால் இதற்கும் மேலாக அவரது முக்கிய நோக்கம் என்னவெனில் யுத்தம் அவரது மகனை கொல்ல முடியாது என்று நம்புவதே.

### 'நெறியாளர் பற்றி' ஒரு நோக்கு

பிரசன்ன விதானகே 1962இல் பிறந்தார்.பாடசாலையை விட்டு விலகியதும் அவர் நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டார்.அவர் பேர்னாட்சோவின் **Arms and the men** என்ற நாடகத்தை 1986இலும் டாறி யோ.'.போவுடைய **straw perriesand trumbets** ஆக்கத்தை 1991லும் மொழி பெயர்த்தார். அவர் தனது சிசில கினிகனி (உறைபனியில் நெருப்பு) என்னும் முதலாவது திரைப்படத்தை, நெறி யாள்கை செய்து 1992இல் வெளியிட்டார். அது இலங்கையின் ஒன்பது OCIC விருதுகளைப் பெற்றது. அது சிறந்த நெறியாளர், சிறந்த நடிகை,சிறந்த நடிகர் ஆகியவற்றுக்கான விருதையும் பெற்றது. அவரது இரண்டாவது திரைப்படமான ஆனந்தராத்திரிய "ஆத்மாவின் இருண்ட இரவு" 1996இல் தயாரிக்கப்பட்டது. அதை அவரே எழுதி நெறியாள்கை செய்தார். இது பல சர்வதேச திரைப்படவிழாவில் பங்கு பற்றியது. முதலாவது பூசன்(**Pusan International**) திரைப்படவிழாவில் பங்கு பற்றி ஒரு ஜூறியின் விசேட குறிப்புரையைப் பெற்றது.



1996இல் இலங்கைத் திரைப்பட விமர்சகர் மன்றத்தின் பிரதான (**Sri Lanka Film Critics Forum Awards**) விருதுகளைப் பெற்றதோடு, சிறந்த படத்துக்கும் சிறந்த நெறியாள்கைக்கும் சிறந்த திரைக்கதை வசனத்துக்குமான விருதுகளையும் பெற்றது. இவரது மூன்றாவது படம் பவுறு வலலு( சுவர்க்கங்களுக்குள் சுவர்) இது 1997 இல் பூர்த்தியாக் கப்பட்டது. இதில் வயலெட்டாக வரும் நித்த.'.பேர்னன்டோவுக்கு சிறந்த நடிகைக்கான விருது 1998 இல் சிங்கப்பூர் சர்வதேச திரைப்பட விழாவில் வழங்கப்பட்டது. 1998 இல் இலங்கை விமர்சக மன்றத்தால் (**Sri lanka Film Critics Forum**) வழங்கப்பட்ட பதினொரு விருதுகளில் பத்து விருதுகளை இது வென்றெடுத்தது. இதற்குள் சிறந்த படத்துக்கான சிறந்த நெறியாளருக்குமான விருதும அடங்கும். இவரே எழுதி இவராலேயே நெறியாள்கை செய்யப்பட்ட "புரஹந்த கலுவர்" (ஓர் பூரணையில் மரணம்) 1997இல் பூர்த்தியாக்கப்பட்ட இவரது நாலாவது ஆக்கமாகும்.

**நடிகர்கள்**

ஜோ அபேவிக்கிரம(வன்னிஹாமி),பிரியங்கா சமரவீர(சுனந்த),லின்ரன் செமகே(சோமே),மகேந்திரபெரேரா,(அரசஅலுவலர்)நயன்னஹெட்டியாராச்சி (யமுனா),குமாரகருணானந்த,(யமுனாவின்கணவன்)ஹார்ஷெமித், அபேசூரிய (அவர்களின் மகன்),கே.ஏ.மில்ரன் பெரேரா (பள்ளிக்கூட ஆசிரியர்),எம்.டி.மகிந்தபால-படப்பிடிப்பு நெறியாள்கைஏ.சிறீகர் பிரசாத் -படத்தொகுப்பு,சே.ஏ.மில்ரன் பெரேரா -கலை நெறியாள்கை ஈபேற் விஜேசிங்க-ஒப்பனைஜயசுதா-ஒலிப்பதிவு

# ஈராக் போரின் பாதிப்பு மலையகத்தில் எதிரொலிப்பு

(கொழும்பு)

ஈராக் யுத்தம் காரணமாக மலையகத் தோட்டத் தொழிலாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார்.

றம்புகல தமிழ் வித்தியாலயத்தில் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசுகையில், மலையகத் தோட்டத் தொழிலாளிகள் தேயிலையை மாத்திரம் நம்பி இருக்கக்கூடாது. சுயதொழில் முயற்சிகள், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புகளிலும் ஈடுபட வேண்டும்.

ஈராக் யுத்தம் காரணமாக ஈராக், சிரியா,சவுதிஅரேபியா போன்ற நாடுகள் இலங்கையில் இருந்து தேயிலையை இறக்குமதி செய்வதைக் குறைத்துள்ளன. இதனால் இலங்கைக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இப்போர் நீடித்தால் இலங்கையின் ஏற்றுமதியில் 75 சதவீத வீழ்ச்சி ஏற்படும். இலங்கை வரலாற்றில் தேயிலை ஏற்றுமதியில் இவ்வாறான ஒரு வீழ்ச்சி ஏற்படுவது இதுவே முதல் தடவை எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)


மேற்கு குவைத்திலிருந்து ஈராக் செல்லும் அமெரிக்கப் படையணியொன்று நகர்கிறது


பாஸ்ரா நகரில் ஈராக் சிறுவன் ஒருவன் மணலில் இருக்கிறான். பிரிட்டிஷ் டாங்கிகள் அருகில் கடந்து செல்கிறது


தென் ஈராக்கில் காயமுற்ற பிரிட்டிஷ் வீரர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்






நோயுற்ற ஈராக்கிய குடும்பம் ஒன்று பிரிட்டிஷ் டாங்கிப்படைவீரரிடம் மருத்துவ உதவி பெறுகிறார்.

# சக்திவாய்ந்த மிகப்பெரிய விமானங்கள் ஈராக் பயணம்

(வாஷிங்டன்)

அதிக சக்திவாய்ந்த குண்டுகளுடன் அமெரிக்காவின் மிகப்பெரிய பி-52 குண்டு வீச்சு விமானம் நேற்று இங்கிலாந்து நாட்டில் இருந்து ஈராக் விரைந்தது.

ஈராக் மீது அமெரிக்க மற்றும் இங்கிலாந்துப்படைகள் நேற்று முன்தினம் 8வது நாளாக ஈராக் தலைநகர் பக்தாத் மீது தாக்குதல் நடத்தின. ஈராக் தலைநகர் பக்தாத்தின் புறநகர் பகுதிகள் உட்பட பல இடங்களில் நேற்று அமெரிக்கா ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. அதே போல் அமெரிக்க போர் விமானங் களும் குண்டுகளை வீசின. சுமார் 30 குண்டுகள் வீசப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்காவின் பி-52 என்ற அதிக சக்திவாய்ந்த போர் விமானங்களும் இந்த தாக்குதலில் பயன்படுத்தப்பட்டன.

இதே பி-52 ரகத்தைச் சேர்ந்த மிகப்பெரிய போர் விமானம் மூன்று நேற்று முன்தினம் இங்கிலாந்து நாட்டில் இருந்து ஈராக் விரைந்தன.

உலகிலேயே அதிக சக்திவாய்ந்த இந்த பி-52 குண்டு வீச்சு விமானம் அதிக எடையுள்ள குண்டுகளையும், ஏவுகணைகளை யும் தாங்கிச் செல்லக்கூடியது.

அமெரிக்காவுக்கு சொந்தமான இந்த பி-52 போர் விமானங்கள் உலகில் பல்வேறு நாடுகளில் உள்ளஅமெரிக்க விமானதளங் களில் நிறுத்தப்பட்டுள்ளன.

ஈராக் தலைநகர் பக்தாத்தை பிடிக்க அமெரிக்க,இங்கிலாந்துப் படைகள் கடுமையான போரில் ஈடுபட்டு இருக்கும் இந்த வேளையில் பி-52 பெரிய போர் விமானம் ஈராக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். (பி)

# போருக்கு மத்தியிலும் ஈராக் எண்ணெய் அனுப்புகிறது

(நியூஜோர்க்)

அமெரிக்காவுடன் போர் கடுமையாக நடந்து வருகின்ற போதிலும் கூட ஈராக் தொடர்ந்து துருக்கி நாட்டிற்கு எண்ணெய்யை ஏற்றுமதி செய்து வருகிறது.

ஈராக் மீது அமெரிக்க கூட்டணிப் படைகள் சரமாரியாக தாக்குதல் நடத்தி வருகின்றன. போர் விமானங்கள் மூலம் குண்டு மழை பொழிந்து வருகின்றன. ஏவுகணைகளும் வீசப்பட்டு வருகின்றன. போதாக்குறைக்கு அமெரிக்க, இங்கிலாந்து தரைப் படையினரும் அந்நாட்டின் பெரும்பாலான நகரங்களை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். அமெரிக்க படைகளின் இக்கடுமை யான தாக்குதலால் ஈராக் நாட்டின் முக்கிய இடங்கள் தரைமட்ட மாகியுள்ளன. ஏராளமான எண்ணெய்க் கிணறுகள் தீப்பற்றி எரிகின்றன. தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஏராளமான ஈராக் வீரர்கள் சரணடைந்து உள்ளனர். நூற்றுக்கணக்கான வீரர்கள் கொல்லப் பட்டும் வருகின்றனர். ஈராக் முழுவதும் ஈராக் ராணுவத்திற்கும் அமெரிக்க படையினருக்கும் இடையே கடுமையான சண்டை நடந்து வருகின்றது. இவ்வளவு கடுமையான போர் நடந்து வருகின்ற போதிலும்கூட அந்நாடு இன்னும் தொடர்ந்து எண்ணெயை ஏற்றுமதி செய்து வருகிறது. அந்நாட்டின் வடக்கு பிராந்தியத்திலுள்ள எண்ணெய் வயல்களில் இருந்து துருக்கி நாட்டிற்கு இன்னும் தொடர்ந்து எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. வடக்கு ஈராக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகளில் இருந்து 1050 கிலோ மீற்றர் தூரம் பைப்லைன் மூலம் இந்த எண்ணெய் துருக்கியிலுள்ள சிகான் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. தினந்தோறும் இந்த பைப்லைன் மூலம் 1,70,000 பெரல்கள் அளவு கொண்ட எண்ணெய் துருக்கிக்கு பாய்கிறது. அங்கிருந்து ஒயில் பீப்பாக்களில் எண்ணெயை சுதந்திரமாக கொண்டு செல்கின்றன. (பி)

# ஈராக்கிய ரி. வி. நிலையம்மீது ஏவுகணைத் தாக்குதல்

(வாஷிங்டன்)

ஈராக் தலைநகர் பக்தாத் நகரில் உள்ள ஈராக் தொலைக்காட்சி நிலையத்தின் மீதும், முக்கிய தகவல் தொடர்பு மையத்தின் மீதும், செயற்கைக் கோள் தகவல் தொடர்பு நிலையத்தின் மீதும் அமெரிக்கா ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள தொலைக்காட்சி நிலையம் முக்கிய தகவல் தொடர்பு மையம், செயற்கைக் கோள் தகவல் தொடர்பு நிலையம் ஆகியவற்றின் மீது அமெரிக்க கடற்படையினர் சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

ஏவுகணை வீச்சு மட்டும் அல்லாமல் அமெரிக்க போர் விமானங் களும் இந்த மையங்கள் மீது சரமாரியாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

அதிகாலை நேரத்தில் நடைபெற்ற இந்தத் தாக்குதலின் சேத விபரங்கள் பற்றிய தகவல்கள் உடனடியாக தெரியவில்லை.

இந்தத் தகவல்களை அமெரிக்க இராணுவத்தின் ஈராக் தாக்குதல் கூட்டுப்படையின் அதிகாரிகள் கூறினர். (பி)

**எட்டாவது நாளாகவும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஈராக் மீதான அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளின் தாக்குதல் நடவடிக்கைகளையும் அதனால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களின் சிலபகுதிகளையும் படங்களில் காணலாம்.**




கட்டடங்கள் நொறுக்கப்பட்டு பொருட்கள் சிதறுண்டு கிடக்கின்றன.

AP


AFP


ஆத்திரமுற்ற ஈராக்கியர்கள்

AFP


ஈராக்கிய வீரர்கள்







# மனிதப் பண்புடன் வாழ்ந்து இறைவனை அடைய புனிதமான கல்வியறிவு பெருந்துணை புரியும்

## வெள்ளி நற்சிந்தனை

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, காலத்தால் அழியாதது கல்வி. தீயினாலோ வெள்ளத்தினாலோ அழிக்க முடியாதது கல்வி. கொடுக்குந்தோறும் குறைவடையாதது கல்வி. இத்துணை மேன்மை தங்கிய கல்விச் செல்வத்தை சைவ மக்களாகிய நாம் நிச்சயம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இறைவன் நம்மைப் படைத்தது நாம் அவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். எமது இந்து சமயம் இனிய சிந்தனைகளை இவ்வையகத்துக்கு வழங்கி உள்ளது. மனிதன் மனிதனாக மனிதப் பணபுடன் வாழ்வதற்குக் கல்வி பெரிதும் துணை செய்யும் என்பதனை இந்துக் தத்துவ நூல்களும் மெஞ்ஞானிகளின் அருள்வார்த்தைகளும் காலத்துக்குக் காலம் வலியுறுத்தி வந்துள்ளன.

### கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்

இன்று எம் சமூகத்தில் பலர் பாடசாலையில் பயிலும் பருவத்தில் கல்வியைப் பயிலாது விட்டு,விட்டுக் காலத்தை வீணேகழிக்கின்றாகள். அஞ்ஞான இருளை அகற்றி, மெஞ்ஞான ஒளி தந்து வாழ்வில் எம்மை உயவிப்பது கல்வி மெஞ்ஞான நெறியில் நின்ற ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

'கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர்'

எனக் கூறினார். சைவ சமயத்தவர்கள் கல்விக்கு ஒரு தெய்வத்தை தனித்துவமாகப் போற்றி வழிபடும் சிறப்புடையவர்கள். பிற சமயங்களில இல்லாத தனித்துவச் சிறப்பு கல்விக்கு அதிபதியாகக் கலைவாணியைப் போற்றி வழிபடும் மரபு.

''கல்லார் நெஞ்சின் நில்லான் ஈசன'

என்பது சம்பந்தர் பெருமானின் திருவாக்கு.


### கல்லாத மூடர் கருத்தறியா

'கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னை கற்றார்கள் உற்றோரும் காதலானை'

என்பது அப்பர் சுவாமிகள் அமுத வாக்கு. கடவுளை அடைவதற்கும கருணையுள்ளவராக வாழ்வதற்கும கல்வி அவசியம் என இந்துக்கள் முதன்மை கொடுத்து மதித்தனர். இறைவன் கல்வி அறிவு பெறும் வாய்ப்பினை எமக்குத் தந்துள்ளான். அதனை உதாசீனம் செய்தல்தகாது.

'கல்லாத மூவரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்களுக்குக் கல்லாரே நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே'

என்று திருமூலர் திருமந்திரத்தில் கல்லாதவரை மூடர் எனக் குறிப்பிடுகிறார். எம் முன்னோர்கள் இறை வழிபாட்டுத்தலங்களில் எல்லாம் வழிபாட்டோடு வாழ்வுக்குரிய கல்வியையும் அடியவர்கள் பெற வழி செய்தார்கள்.அறிவு தருகின்ற பள்ளிக் கூடங்களை உருவாக்குவதையும் அறப்பணிகளாகக் கருதினர்.



### கல்விப் பணி கடவுட்பணி

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் வாழும்
மனிதர்க் கெல்லாம் பயிற்றிப் பல கல்வி
தந்து பாரை உயர்த்திட வேண்டும'

என்றார் மகாகவிசுப்பிரமணிய பாரதியார். கல்விப் பணியை கடவுள் பணியாகக் கொண்டு வாழ்ந்தவர் நம்முன்னோர்கள். கலவிக்கு முக்கியத்துவம் கொடுக்காது பணத்தற்கு முக்கியம் கொடுப்பது மகாதவறு. கல்லாதவனிடம் சேரும் பணம் ஆபத்தானது.இதனை வள்ளுவப் பெருந்தகை கல்லாமை என்ற அதிகாரத்தில்.

'நல்லார் கண் பட்ட வறுமையின்
இன்னாதே கல்லார் கண்பட்ட திரு'

எனக் குறிப்பிடுகிறார். அதாவது கல்வி அறிவுள்ள நல்லவரிடம் உள்ளதான் வறுமையை விடக் கல்லாதவரிடம் சேர்ந்த அளவற்ற செல்வமானது பெரிதும் துன்பம் தருவதாகும. உலக நீதி சொன்ன உலகநாதரும்.

'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம'

என்றார். ஆகவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொரும் வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டும். கடவுள் தந்த இந்த நல்லவாழ்வுக்கு நாம் நன்றிக் கடன்பட்டவர்கள். அறிவைப்பெறும் பிறவியைத்தந்த ஆண்டவனுக்கு கல்வியால், கருணையால் அர்ப்பணம் செய்தல் நம் ஒவ்வொருவரதும் கடனாகும்.என்னவறுமை வரினும் இடையுறு வரினும் கல்வியை நாம் தொடர முனைதல் வேண்டும

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்ற முன்னோர் வார்த்தையை உணர்ந்து கல்வியைக் கற்று நாம் மனிதனாக வாழ்ந்து நற்கதி அடைவோமாக.

சமூக ஜோதி
கா. கனேசதாசன்

---

## விபத்தில் இருவர் படுகாயம்

(வல்வெட்டித்துறை)

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிடியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், இருவர் காயமடைந்துள்ளனர். உழவு இயந்திர மொன்றிற்கு இடம் கொடுத்த சமயம் மோட்டாா சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மரத்துடன் மோதியதாலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது, காயமடைந்தவர்களில் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் மற்றையவர் யாழ்.போதனாவைத்தியசாலையிலும அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித் துறையைச்சேர்ந்த தண்டாயுத பாணிதேசிகர் சுதாகரன் என்பவரே யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-63)

## உழவு இயந்திரம் குடை சாய்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்குகூட்டு வீதியிலுள்ள கழிவு நீர்வாய்க்காலில பொலிஸாரின் உழவு இயந்திரம் ஒன்று நேற்று முன்தினம் குடை சாய்ந்தது

இந்த உழவு இயந்திரத்தின சாரதி பிரசாத் குணவர்த்தனா (வயது 29) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-6)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாரந்தனைறோ.க.மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் த.சத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் சிறப்புவிருந்தினராக தீவக வலயக் கல்வித்திணைக்கள கணக்காளர் ஏ.தேவஅருள்ராஜா விடுதலைப்புலிகளின் தீவகஅரசியல் துறைப் பொறுப்பாளர் செ.அருந்தவம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

---

# கடல் விவகாரங்கள் குறித்து விரைந்து கலந்துரையாட க. கா. குழு ஏற்பாடு

(கொழும்பு)

ஜப்பான் ஹக்கோன் நகரில் நடைபெற்ற ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்களில் தீர்மானித்திருப்பதன் பிரகாரம் போர் நிறுத்தக்கண்காணிப்புகுழு, கடல் விவகாரங்கள் தொடர்பான தமது பிரேரணைகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

நோர்வே அனுசரணையாளர் தலைமையில் நடை பெறவேண்டிய இக்கலந்துரையாடல்களுக்கான திகதிகளை தீர்மானித்ததும், அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இது பற்றி அறிவிக்கப்படும் என்று கண் .காணிப்புகுழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ் விவகாரம் பற்றி ஏப்ரல் 24 ஆம் திகதிக்கு முன்னதாக இறுதி தீர்மானம் ஒன்று எட்டப்பட வேண்டும் என்று ஹக்கோனில் தீர்மானம் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இரு தரப்பினருடனும் நடத்தப்படும் பேச்சுக்கள் மூலமாக கடல் மற்றும் தரையில் ஏற்படக்கூடிய தகராறுகள தொடர்பாக முடிவுகள் பெறும் என்று, கண்காணிப்பாளர் தரப்பு பேச்சாளர் ரெய்ரர் ரோக்லீசன் இது பற்றி கருத்துத்தெரிவித்தார்.

கடல் விவகாரங்கள் தொடர்பாக பேசி முடிந்ததும் தரையில் எந்தத் தரப்புக்கு உரியது என்று குறிக்கப் படாத பகுதிகள் பற்றிய விவகாரமும் ஒவ்வொரு பகுதியினராலும் தடுத்து வைக்கப்படும் ஆட்கள் தொடர்பான விவகாரங்களும் ஆராயப் படும். கிழக்கில் கட்டுப்பாட்டுப் பகுதிகள்பற்றிமுடிவுசெய்யபபடும் போது ஒவ்வொரு தரப்பும் தத்தம்து பகுதிகளுக்குச் செல்வதற்கு பயன் படுத்தும் பகுதிகள் பற்றி தீர்மானித்து முடிவு செய்யப்படும் என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (உ)

---

# முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்த வேண்டுமென விடுதலைப் புலிகள் விரும்புகின்றனரா?

## தே.ஐ. முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப் கேள்வி

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசித்தீர்க்க வேண்டும் என புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் ஜப்பான் பேச்சு வார்த்தைகளில் தெரிவித்திருப்பது,முஸ்லிம் மக்கள் மத்தியல் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் பாராளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து விளக்குவதாயின் முஸ்லிங்கள தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். எனவே, இதற்குச சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் வழி நடத்தலில் கடந்த 20 வருட காலமாக இடம் பெற்றயுத்தமே பேச்சு வார்த்தைக்கு வழி வகுத்தது என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் முஸ்லிம் இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்திப்போராட வேண்டும் என்பது விடுதலைப்புலிகளின் விருப்பமா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த-8)

---

# உயர் பாதுகாப்பு வலய விபரங்களை சமர்ப்பிக்குக

## மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசம் சம்பந்தமான விபரங்களை யாழ். மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் சந்திரசேகரா யாழ்மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி சரத் பொன் சேகாவிடம் கோரியுள்ளார்.

உயர்பாது காப்பு வலயப் பிரதேசம் சம்பந்தமாக இது வரை 372 முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன, இம்முறைப்பாடுகள் தொடர்பாக இராணுவத் தளபதி விசாரிக்கப்பட்டார். இதன் போது,வர்த்தமானி அறிவித்தலுக்கமையவே உயர்பாதுகாப்பு வலயம் பேணப்பட்டு வருவதாக இராணுவத்தளபதி பதிலளித்தார்.

மேற்படி முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற் கொள்வதற்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் சம்பந்தமான விபரங்களை யாழ். மனிதவுரிமை ஆணைக் குழுவில் சமர்ப்பிக்குமாறு கோரியதாக சந்திரசேகரா தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். கோட்டை மற்றும்யாழ்மாநகர சபைக் கட்டடப்பகுதக்களைஉள்ளடக்கிய பாரியஇராணுவ முகாம் ஒன்றைப்படையினர் அமைப்பதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாகக்கூறப்படும் இச் சந்தர்ப்பத்தில் உயர்பாதுகாப்பு வலயப்பிரதேசம்சம்பந்தமான விபரங்களை மனிதவுரிமை ஆணைக்குழுத்தலைவர் கோரியுள்ளமைஇங்குகுறிப்பிடத்தகது. (த)

---

## நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர்ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்மாகவுள்ளது.

தொடர்ந்து ஆலயத் தேர், தீர்த்த உற்சவகள் முறையே எதிர் வரும் 14,15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-252,36)

## சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தேர் முட்டியில் இருந்து விழுந்த சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

காரைநகர் இடைப்பட்டியில் நடைபெற்ற இச் சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த காநதிலகர் சுதாகரன் (வயது-9) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார். (த-6)

---

### மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்

# முகாம் அமைக்கும் முயற்சியைக் கைவிடக் கோரி மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் சுப்பிரமணியம் பூங்காவை அண்டிய யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான பெருநிலப் பரபபில், பாரிய முகாம் அமைக்கும் படையினரின் நடவடிக்கையைக் கண்டித்தும் அதனைக் கைவிடக் கோரியும் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் மகஜர் ஒன்றைக்கையளித்தது.

கடந்த செவ்வாயன்று ஒன்று கூடிய யாழ் .குடா நாட்டு மனித நேய அமைப்புக்கள், யாழ். குடா நாட்டின் மத்தியில் சுபாஸ் விடுதி,ஞானம் விடுதி என்பவற்றில் நிலை கொண்டிருக்கும் படையினர் வெளியேறி, யாழ்.கோட்டையை அண்டிய,யாழ். மாநரசபையின் முன்னாள் அலுவலகம்,வாடிவிடுகள் முற்ற வெளி உள்ளிட்டபெருநிலப்பரப்பில் பாரியமுகாம் அமைக்கும் படையினரின் முயற்சிகள் குறித்து ஆராயந்தன.

அதன் போதுஇம் முயற்சியினைத் தடுத்து நிறுத்தும் வகையிலான தொடர்ச்சியான நடவடிக்கைகளில் உடனடியாகவே ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இந் நடவடிக்கைகளை முனனெடுக்க 9 பேர் கொண்டதோர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இதன் முதல் நடவடிக்கையாகவே நேற்றைய தினம் மேற்படி மகஜர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி லெனாட் கிளைன்ஸிடம் கையளிக்கப்பட்டது.

இம் மகஜர் கையளிப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சு. பரமநாதன்,சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் எஸ். கஜேந்திர குமார்,வர்த்தகர் சங்கத் தலைவர் இ.ஜெசேகரன்,தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், வட மாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த முபீன்,அருட்தந்தை பேணாட் அடிகளார், மனித நேய அமைப்புக்களின் செயலாளர் சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-7,47)

---

# மலையகத் தமிழர் மீது பொலிஸார் அடாவடி

(கொழும்பு)

மலையகத்தில் பூண்டு லோயத் தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் ஸ்ரீ லங்காப் பொலிஸாரினால் கடுமையாகத்தாக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் மாலை நேரம் தமக்குரிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு வீடு திரும்பிய தொழிலாளர்களை சீருடையில் வந்த பொலிஸார் மறித்து சோதனையிட முயன்றனர்.

பொலிஸாரின் சீருடையில் வந்த பலரால் ஏற்கனவே அவ்விடத்தில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றதால்,தம்மை மறித்த பொலிஸாரிடம் அடையாளத்தை உறுதிப்படுத்துமாறு தொழிலாளர்கள் கேட்டனர்.

இதனையடுத்து அவர்கள் கொண்டு சென்ற உணவுப் பொருட்களைப் பறித்து வீசிய பொலிஸார் அவர்களை கடுமையாகத்தாக்கியதாக கூறப்படுகிறது. (உ-10)

## இன்று ஒரு தகவல்

# அறிவா? செல்வமா?

இந்த உலகத்திலே நாம் நல்ல படியாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது இரண்டு. ஒன்று செல்வம். மற்றது அறிவு. சரி! இந்த இரண்டிலும் சிறந்தது எது? என்று ஒரு கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வது? இதே கேள்வியை ஹஸ்ரத் அலி என்பவரிடம் கேட்டார்களாம். அவர் ஒரு பெரிய அறிஞர். கேள்வி கேட்டவர்களும் சாதாரண ஆட்கள் இல்லை. இவர்களும் அறிஞர்கள்.

ஒரு நாள் ஹஸ்ரத். அலியிடம் பத்து அறிஞர்கள் வந்தார்களாம். "ஐயா! நாங்கள் பத்துப் பேரும் உங்களிடம் ஒரே கேள்வியைத் தான் கேட்கவந்திருக்கிறோம். ஆனால் எங்கள் பத்துப்பேருக்கும் நீங்கள் தனித்தனியாகப் பதில் சொல்ல முடியுமா?" என்று கேட்டிருக்கிறார்கள். அதாவது அவர்கள் ஒரே கேள்விக்கு இவரிடமிருந்து பத்து விதமான பதிலை எதிர்பார்க்கிறார்கள். சரி! கேளுங்கள்... என்ன கேள்வி என்றார் இவர். அப்பொழுது தான் அவர்கள் "செல்வம் அறிவு இவ்விரண்டிலும் சிறந்தது எது?" என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அலி அவர்களை ஒவ்வொருவராகக் கூப்பிட்டு ஒவ்வொரு விதமான பதிலைச் சொல்லி அனுப்பினார்.

முதலில் ஒருவரைக் கூப்பிட்டு "அறிவு என்பது தீர்க்க தரிசிகள், மகான்கள், ஞானிகள் போன்றோரின் பரம்பரைச் சொத்து. ஆனால் செல்வமோ கொடுங்கோலரின் ஆயுதம். ஆதலினால், அறிவு தான் சிறந்தது" என்று சொன்னார். இரண்டாவது ஆளைக் கூப்பிட்டு "உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள் தான் அதைக் காப்பாற்ற வேண்டும்... ஆனால் அறிவு உங்களை எப்போதும் காப்பாற்றும். ஆகவே அறிவுதான் சிறந்தது" என்று சொன்னார். மூன்றாவது ஆளிடம் "செல்வனுக்கு எப்பொழுதும் விரோதிகள் அதிகம் ஆனால் அறிஞனுக்கு நண்பர்கள் அதிகம். அதனால், அறிவு தான் சிறந்தது என்றார். நான்காவது ஆளிடம் "செல்வம் மற்றவர்களுக்கு கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் கல்வியோ அதிகரித்துக் கொண்டே வரும். ஆகவே அறிவு தான் சிறந்தது" என்றார். ஐந்தாமவரிடம் "அறிவுள்ளவன் எப்பொழுதும் அதை வாரி வழங்கிக் கொண்டேயிருப்பான். ஆனால் அவனிடம் தாராளத் தன்மை இருக்கும். ஆனால் செல்வனிடம் கஞ்சத்தனம் இருக்கும். அதனால் அறிவே சிறந்தது" என்றார்.

ஆறாவது நபரைக் கூப்பிட்டார் "செல்வத்தைக் கள்வர்கள் திருடிக் கொண்டு போக முடியும் ஆனால் அறிவைக் கவர முடியுயாது" என்றார். ஏழாவது நபரிடம் "செல்வம்-கால ஓட்டத்தில் அழிந்து விடும். ஆனால் அறிவைக் கால ஓட்டம் ஒன்றும் பண்ணமுடியாது. ஆகவே அறிவு தான் சிறந்தது" என்றார். எட்டாவது ஆளை அழைத்து "செல்வத்துக்கு எப்போழுதும் எல்லையுண்டு, நிறையுண்டு, அளவுண்டு கணக்குண்டு, ஆனால் அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லை எதுவும் கிடையாது. அதனால் அது தான் சிறந்தது" என்றார். ஒன்பதாவது ஆளை அழைத்து "செல்வம் உள்ளத்தேயுள்ள ஒளியைப் போக்கிவிடும். இருளை உண்டாக்கிவிடும். விரிந்த மனப்பான்மையை குறுகலாக்கிவிடும். ஆனால் அறிவு அப்படியில்லை! இருண்ட உள்ளத்தில் ஒளியைப் பாய்ச்சி அதை விலாசமாக்குகிறது. அதனால் அதுவே சிறந்தது" என்றார்.

கடைசியாகப் பத்தாவது நபரைக் கூப்பிட்டார். "செல்வம் மனதிலே செருக்கை உண்டாக்குகிறது. ஆணவத்தை ஏற்படுத்துகிறது. அதனாலே "நானே கடவுள" என்று நினைக்கிற அளவுக்கு மனிதனைத் தாழ்த்தி விடுகிறது. ஆனால் அறிவு பணிவையும் பண்பாட்டையும் வளர்க்கிறது. அதனாலே அறிவு தான் சிறந்தது" என்று சொன்னார். இப்படியாகப் பத்துப் பேருக்கும் பத்து விதமாகப் பதில் சொன்னதன் மூலம் ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவு தான் செல்வத்தை விடச் சிறந்தது என்பதற்கு. பத்துக் காரணங்களையும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அந்த அறிஞர் பத்துப் பேர் கேட்ட கேள்விக்கு பத்துப் பதிலைச் சொன்னார். 'எனக்கு வேண்டிய ஒருவர் பத்துப் பேர் கேட்ட கேள்விக்கு ஒரே பதிலைச் சொல்லி சமாளித்து விட்டார் சார். கேள்வி என்ன தெரியுமா? "என்னிடம் வாங்கிய கடனை எப்போது ஐயா திருப்பிக் கொடுக்கப்போகின்றாய்?" என்பதுதான். "இந்தமாதம் 26திகதி தந்து விடுகிறேன்!" என்கின்ற ஒரேபதிலைச்சொல்லி அவ்வளவு பேரையும் அனுப்பிவைத்துவிட்டார் இவர். எல்லோரும் போனபின்னர் இவரைத்தனியாக அழைத்து, "அது என்னசார் கணக்கு, 26ம்திகதி. அன்றைக்கு என்ன அதிசயம் நடக்கப்போகிறது? என்று கேட்டேன். "அதிசயம் அன்றைக்கு இல்லைசார்! அதற்கு முதல் நாளே நடக்கபோகிறது!" என்றார். "விபரமாகச் சொல்லுங்கள்" என்றேன். "வேறு ஒன்றுமில்லை. 26ஆம் திகதி தானே எல்லாரையும் வரச் சொன்னேன். அதற்கு முதல் நாளே நான் புறப்பட்டுத் தலை மறைவாகிவிடப் போகிறேன்" என்று மிகவும் பெருமையாகச் சொன்னார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மலையகத் தமிழ் மக்களுக்கு தனியான அதிகார அலகு

## மலையக மக்கள் முன்னணி மீண்டும் வலியுறுத்து

(நமது நிருபர்)

வட கிழக்கிற்கு வெளியே வாழும் 15 லட்சம் மலையகத் தமிழ் மக்களுக்குத் தனியான அதிகார அலகு ஒன்று மலையகத்தில் உருவாக்கப்பட வேண்டுமென்று மலையக மக்கள் முன்னணியின் உப தலைவர் ஆ.லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் நடைபெறவுள்ள சமஷ்டி தொடர்பான கருத்தரங்கில் மலையகத் தமிழ் மக்களுக்குத் தனியான அதிகார அலகு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்தை தான் வலியுறுத்தப் போவதாகவும் லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மலையகத் தமிழ் மக்களுக்கென்று இந்தியாவில் உள்ள பாண்டிச் சேரி போன்ற ஒரு அதிகார அலகு உருவாக்கப்படவேண்டுமென்று 1994 ஆம் ஆண்டு வலியுறுத்தினோம் அதையே தொடர்ந்தும் வலியுறுத்தவுள்ளோம்.

இனப்பிரச்சினைத் தீர்வில் வடகிழக்குத் தமிழ்- முஸ்லிம் மக்களுக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படு கிறதோ அதேபோல் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

சமஷ்டி முறையிலோ, பிரதேச அடிப்படையிலோ அல்லது எவ்வகையான தீர்விலும் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டும் என்று ஜேர்மனியில் பங்கு பற்றும் குழு உறுதியாக வலியுறுத்தும் என்றும் மலையக மக்கள் முன்னணியின உப தலைவர் லோறன்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# பொலிஸ்சேவை அதிகாரங்கள் சில பொலிஸ்மா அதிபருக்கு கைமாறும்

## தேசிய பொலிஸ் ஆ.கு. தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் சேவை அரசியல் மயமாவதைத் தடுப்பதற்காகவே தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழு அமைக்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்த அறிவூட்டல் கருத்தரங்கு நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரஞ்சித் அபயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

எதிர்காலத்தில் பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் என்பவற்றை அரசியல் வாதிகளின் செல்வாக்குடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

பொலிஸ்சேவையில் ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல், இடமாற்றங்களை வழங்கல், பதவி உயர்வுகளை வழங்கல் ஆகிய அனைத்துப் பொறுப்புக்களும் பொலிஸ் ஆணைக்குழுவையே சாரும்.

எனினும், பொலிஸ் சேவையின் சில அதிகாரங்களை பொலிஸ்மா அதிபருக்கு வழங்குவதற்கு இவ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ்மா அதிபரின் முடிவுகளில் திருப்தி அடையாதவர்கள் அது தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேன்முறை யீடு செய்யலாம்.

இதற்கு மேலதிகமாக பொலிஸார் தொடர்பான முறைப்பாடுகளை, பொது மக்கள் முன்வைக்கக்கூடிய செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் இவ்வாணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (உ-8)

## இராசி பலன்

**28.03.2003**

**(பங்குனி 14,வெள்ளி)**

| | |
|---|---|
| ஏகாதசி | மு.ப. 9.43வரை |
| திருவோணம் | பி.ப. 5.17வரை |
| இராகுகாலம் | 10.44-12.14 |
| சுபநேரம் | 6.14-7.44 |

ஏகாதசி விரதம்

**மேடம்**
சுபநிகழ்ச்சி,கடின உழைப்பு,பிறரது ஒத்துழைப்பு,முயற்சி பலிதம்,

**இடபம்**
ஆன்றோர் மதிப்பு,உடல் உழைப்பு, வீண்பயம்,புதிய திட்டமிடல்.

**மிதுனம்**
வீண் தொல்லை,காரிய தாமதம்,எதிர்பாராத அச்சம்,புதிய திருப்பம்.

**கடகம்**
திடீர் பயணம்,அபூர்வ சந்திப்பு, தனவரவு,சுவாரஸ்யம்.

**சிங்கம்**
சத்துரு ஜெயம்,பூர்வ புண்ணியம்,முயற்சி கைகூடும்,போசன சுகம்.

**கன்னி**
வியாபார நன்மை,மனச்சோர்வு,பிரயாண இடையூறு,குடும்பக் கவலை.

**துலாம்**
கல்வி மேன்மை,அற்பர் நேசம்,காரிய தாமதம்,தாய் வழி உறவு

**விருச்சிகம்**
கூட்டு முயற்சி,நல்ல சம்பவம்,குடும்ப மகிழ்ச்சி,அன்னியர் உறவு

**தனுசு**
வேலையில் மந்த நிலை,எடுத்த காரியம் தாமதமாகும்,கற்பனை மிகுதி,போசன சுகம்.

**மகரம்**
நல்ல முயற்சி,காரிய அனுகூலம்,போசன சுகம்,சயன சுகம்.

**கும்பம்**
உணர்ச்சிவசப்படல்,காரிய அலைச்சல், சுப செலவு,விருந்துபசாரம்.

**மீனம்**
எதிர்பாராத நன்மை,தெய்வ தரிசனம், தொழில் சிந்தை,மனமகிழ்ச்சி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# பலியான முஸ்லிம்களுக்கு இன்று ஜனாஸாத் தொழுகை

## கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெறும்

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் கூட்டுப்படைத் தாக்குதல்களினால் உயிரிழந்த முஸ்லிம்களுக்கான ஜனாஸா தொழுகை ஒன்றை இன்று வெள்ளிகிழமை மேற்கொள் வதற்கு மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இன்று நடைபெறவுள்ள தொழுகையை அடுத்து இந்த ஜனாஸா தொழுகை நடைபெறவுள்ளது.

இத் தொழுகையின் போது விசேட நு.ஆ பிரார்த்தனையும் விசேட கூட்டம் ஒன்றும் அங்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத் தொழுகை தொடர்பாக கருத்து தெரிவித்த அலவி மௌலானா,

அமெரிக்காவின் இப்போர் நடவடிக்கையானது இஸ்லாத்துக்கு மட்டுமன்றி ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்கும் எதிரான ஒன்று.

இந்த யுத்தத்தில் உயிரிழந்த முஸ்லிம்களுக்கு அனைத்துப் பள்ளி வாசல்களிலும் ஜனாஸா தொழுகையும் விசேட பிரார்த்தனையும் நடத்த வேண்டும் என்றும் அலவி மௌலானா வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

# உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடத் தயார்

## தமிழ்க் காங்கிரஸ் தலைவர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ள உளளூராட்சித் தேர்தலில் தமிழர் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதையே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விரும்புகிறது என அக்கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

எனினும் தனித்துப் போட்டியிடுவதற்கு தமது கட்சி தயாராகவுள்ளது. கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இது பற்றி இறுதி முடிவு வெளியிடமுடியும்.

எதிர்வரும் ஜூன் மாதம் 25 ஆம் திகதி வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நடத்த திட்டமிட்டிருக்கும் இவ்உள்ளூராட்சித் தேர்தல் குறித்து கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகள் எவையுடனும் இதுவரை அவர் கலந்துரையாடவில்லை என்று விநாயகமூர்த்தி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழர் விடுதலைக கூட்டணி இத்தேர்தல் குறித்து விரைவில் ஆராய இருப்பதாக கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஊழியர் இழப்பீட்டுச் சட்ட திருத்தத்திற்கு அங்கீகாரம்

(கொழும்பு)

ஊழியர் இழப்பீட்டுச் சட்டத்தின் மீதான திருத்தங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதன் பிரகாரம், 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இழப்பீட்டுக் கொடுப்பனவை 2 லட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, தற்போது வழங்கப்படும் 2 லட்சம் ரூபா பெறுமதியான இழப்பீட்டுக் கொடுப்பனவு 3 லட்சம் ரூபாவரை அதிகரிக்கப்படவுள்ளது.

தவிரவும் அரசாங்க ஊழியர் ஒருவர் இறக்கும் பட்சத்தில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ஆயிரம் ரூபாவிலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப படவுள்ளது.

மேலும் போர் முனைகளில் உயிரிழந்த படை வீரர்களின் உறவினர்கள் மற்றும் அங்கவீனமுற்ற படையினர் ஆகியோரில் காணி அற்றவர்களுக்கு காணியும் வழங்கப்படவுள்ளது. (உ-8)

வேலன்று வென்றி தருவது
மன்னவன்
கோலதூ உம் கோடா தெனின்
-குறள்-

## வலம்புரி

### மொட்டவிழ்க்கும் ஜனநாயகம்

2002ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியலுள்ள மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து வாக்களிப்பதற்கு இராணுவம் தடைவிதித்திருந்தது.

இதனால் வடக்குக் கிழக்கின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வசித்த மக்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்தனர்.

ஒரு ஜனநாயக நாட்டில் நாடளாவிய ரீதியில் நடை பெறும் பொதுத் தேர்தலில் ஒரு பிரஜை தனக்கிருக்கக் கூடிய வாக்குரிமையை தான் விரும்பியவருக்கு அளிக்கும் ஆகக் குறைந்த உரிமை உண்டு.

ஆனால்,அந்த உரிமை கூட வடக்குக் கிழக்கில், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில், அதாவது விடுதலைப் புலிகளின் பகுதியில் வசித்த மக்களுக்கு வழங்கப்படவில்லை.

இந் நிலையில் மேற்படி சம்பவம் ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் எனக் குறிப்பிட்டு பாதிக்கப்பட்ட சிலர் உயர் நீதி மன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான பிரஸ்தாப மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதி மன்றம் தனது விசாரணையின் முடிவில் வழங்கிய தீர்ப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள மக்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து வாக்களிக்கும் உரிமை உடையவர்கள்ஆனால், அவ்வுரிமை தடுக்கப்பட்டுள்ளது.

எனவே,இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இம் மனித உரிமை மீறலை இராணுவத் தளபதி பலகல்லவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவும் செய்துள்ளனர் என பகிரங்கமாக உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை இராணுவத் தளபதி பலகல்ல தடுத்துள்ளார் என்ற உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு இந்நாட்டில் இன்னமும் ஜனநாயகம் உயிர்ப்புடன் உள்ளது,அல்லது ஜனநாயகம் மீண்டும் மொட்டவிழ்ந்துள்ளது என்ற முடிவுக்கு நாம் வர முடியும்.

ஒரு நாட்டின் இராணுவத் தளபதியும் அந்நாட்டின் தேர்தல் ஆணையாளரும் ஒரு இனத்தின் வாக்களிக்கும் உரிமையைத் தடை செய்ததன் மூலம் மனித உரிமையை மீறியுள்ளனர் என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு, தமிழ் மக்களுக்கு உற்சாகமளித்துள்ளது.

அத்துடன் அடிப்படை மனிதவுரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்த மனுதாரர்களுக்கு அரசாங்கம் மூன்று இலட்சம் ரூபாவை செலுத்தவேண்டும் எனவும் அதில் இராணுவத் தளபதி பலகல்ல தனது சொந்தப் பணத்தில் தொண்ணூறாயிரத்தை செலுத்தவேண்டும் எனவும் நீதி மன்றத் தீர்ப்பு மேலும் விவரிக்கின்றது.

எதுவாயினும் இத்தகைய ஒரு தீர்ப்பு உலகில் எந்த நாட்டில் வழங்கப்பட்டாலும் அந்த நாட்டின் இராணுவத் தளபதியும் தேர்தல் ஆணையாளரும் உடனடியாகவே தமது பதவிகளை இராஜிநாமா செய்திருப்பர். ஆனால் இங்கு....?

# மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு படையினரின் முயற்சி தொந்தரவாக இருக்கும்

## மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

சுப்பிரமணியம் பூங்காவை அண்டிய பிரதேசத்தில் படையினர் முகாம் அமைக்க முயற்சிக்கும் விடயத்தில் தலையிட்டு அம்முயற்சியைத் தடை செய்யவும் இது சம்பந்தமாக கலந்துரையாடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மேற்படி முகாம் அமைக்கும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தக் கோரி நேற்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்த மகஜரின பிரதிகள் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு யாழ். அலுவலகப் பிரதிநிதி, அரச அதிபர், யாழ்.மாநகர ஆணையாளர் ஆகியோரிடம் கையளிக்கப் பட்டதுடன் பாதுகாப்பு அமைச்சர், நோர்வேத் தூதுவர் மனித உரிமைகள் ஆணைக்குழு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோர்க்கும் அனுப்பி வைக்கப் பட்டன.

மேற்படி மகஜரில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது;

நாட்டில் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதற்கும் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கும் இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சை ஊக்குவிப்பதில் நீங்கள் எடுத்து வரும் முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம்.

இருப்பினும், அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் பொது மக்களுடைய சுதந்திரமான நடமாட்டத்தையும் பொது வாழ்வையும் குழப்புவதாக இருக்கின்றன.

யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகம், நகரமண்டபம், யாழ். மாநகர சபை வாடி வீடு அத்துடன், சில தனிப்பட்டவர்களின் குடியிருப்புக் காணிகளை இராணுவ முகாம் அமைப்பதற்காக பாதுகாப்பு அமைச்சு எடுத்து வரும் முன்னேற்பாடு மன வேதனை தருகிறது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தனிப்பட்டவர்களுடைய மற்றும் பொதுக் கட்டடங்களைத் திருப்பிக் கொடுக்கும் ஏற்பாட்டில் பாதுகாப்பு அமைச்சு தன்னுடைய சொந்தப் பாதுகாப்பைப்பலப்படுத்த முயற்சிக்கிறது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்து, முக்கியமாக மக்கள் செறிந்து வாழும் நகரங்களில் உள்ள சோதனைச் சாவடிகளை பொது மக்களுக்கு தொந்தரவு தராத வகையில் நிறுவுவதற்குப் பதிலாக மேற்படி புதிய முகாமை அமைக்க முயற்சித்தல், சமாதான நடைமுறையிலும் பொதுமக்களுக்கும் பெரும் ஐயுறவை ஏற்படுத்தும்.

இரண்டு உயர்தரப்பாடசா லைகள் (தேசியப் பாடசாலைகள்) மெதடிஸ்த திருச்சபை, முனியப்பர் கோவில், சிறுவர் பூங்கா, யாழ்ப் பாணப் பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, திறந்த வெளி யரங்கு என்பன, அமைக்கப்படவுள்ள இந்த புதிய இராணுவ முகாமைத் தொட்டுக் கொண்டிருக்கின்றன.

புதிய இராணுவ முகாமை அமைத்தல், பொது மக்களுடைய சுதந்திரமான நடமாட்டத்துக்கு தொந்தரவாகவே இருக்கும் என்றுள்ளது. (உ-4,77,7)

**முகாம் அமைக்கும் முயற்சியை தடுத்து நிறுத்துக!**

# சகல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் இராணுவ முகாம் அமைக்கும் நடவடிக்கையை எதிர்த்து சகல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுத்து, இந் நடவடிக்கையை அரசாங்கம் கைவிடச் செய்ய வேண்டும்.

''தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வேண்டுகோள்'' என்ற தலைப்பிட்டு மேற்படி முகாம் அமைப்புத் தொடர்பிலான கண்டன நடவடிக்கைக் குழுவின் சார்பில் சி.வி.கே. சிவஞானம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

யாழ்ப்பாண கோட்டை, முன்னைய பொலிஸ் நிலையம், மாநகர சபை, வாடிவீடு ஆகிய பகுதிகளை உள்ளடக்கி யாழ்ப்பாண நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் திட்டம் மாநகர மக்களை குறிப்பாகவும் மாவட்ட மக்களை பொதுவாகவும் பாதிக்கும் விடயம் என்பதுடன், யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கையும் ஆகும்.

இரண்டு முக்கிய தேசிய பாடசாலைகள், பொது நூலகம், கிறிஸ்தவ தேவாலயம், இந்துகோவில், விளையாட்டரங்கு, சிறுவர் பூங்கா, திறந்த வெளி அரங்கு, போன்ற நிறுவனங்களுக்கு அருகாமையில் இராணுவம் அமைவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

மேலும், இப்படி அமைக்கப்படும் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டு கரையோர மக்களின் மீன்பிடித் தொழிலும் பாதிப்படையும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

# 2ஆம் உலக இந்து மாநாட்டுச் சிறப்பு மலர் தமிழிலும் ஆங்கிலத்திலும்

(கொழும்பு)

இந்து சமய விவகார அமைச்சு எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நடாத்தவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டின் போது சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளது.

தமிழிலும் ஆங்கிலத்திலுமாக தனித்தனியே வெளிவரவுள்ள இச் சிறப்பு மலரில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளின் அறிஞர்கள் பலரதும் ஆக்கங்கள் வெளிவரவுள்ளன.

இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும் வெளியிலும் உள்ள அறிஞர்கள் பலரைக் கொண்ட மலர்க் குழு மலரைத் தொகுத்து வெளியிடும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

மலரின் ஆங்கில வெளியீட்டின் வேலைகளை அமெரிக்க அறிஞரான பெட்ரிக் ஹரிகன் பொறுப்பேற்றுள்ளார். (உ)

# தேர்தல் நடத்தக் கோரும் மனு மீதான விசாரணை

(மட்டக்களப்பு)

2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட பெறுபேறுகளை இரத்துச் செய்து புதிய தேர்தலை நடத்துமாறு கோரும் மனுவை விசாரிப்பதென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலுசாலிக் மௌலானா இந்த வழக்கை கடந்த வருடம் தாக்கல் செய்திருந்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து தேர்தல் வாக்குச் சாவடிகளுக்கு செல்லும் பாதைகளை இராணுவத்தினர் மூடினர். இதனால் அப்பிரதேசங்களைச் சேர்ந்த சுமார்65 ஆயிரம் வாக்காளர்களின்வாக்கு களுக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அநீதி இழைக்கப்பட்டதாக அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை எதிர் வரும் ஜூன் மாதம் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இவ்விசாரணையின் போது மாவட்ட அரச அதிபர் எஸ். சண்முகமும் சாட்சியமளிக்கவுள்ளார். (உ-8)

## வகுப்புகள்

(கல்வியங்காடு)

திறந்த பல்கலைக்கழகத்தின் சிறு வணிகமுகாமைத்துவ கற்கை நெறிக்கான வகுப்புகள் எதிர்வரும் 30ம் திகதி ஞாயிறு முற்பகல் 10மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ.54)

# மோட்டார் வாகனங்களுக்கான ஆவணங்களைப் பெறுமாறு பொலிஸார் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது அதன் உரிமையாளர்களிடம் இருந்து அதற்குரிய அனைத்து ஆவணங்களையும் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு கொள்வன வாளர்களுக்கு யாழ். போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

வாகனங்களை விற்பனை செய்கின்ற பலர் அவற்றுக்கான ஆவணங்களை கொள்வனவு செய்பவரிடம் கையளிப்பதில்லை எனவும்,

இது விடயத்தில் இழுத்தடிப்புக்களை மேற்கொள்ளதாகவும் தமக்கு தினமும் முறைப்பாடுகள் கிடைப்பதாகவும் போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உரிய ஆவணங்களின்றி வீதியில் செல்லும் வாகன உரிமையாளர்களிடம் குற்றப்பணம் அறவிடுவதும் தெரிந்ததே. (உ-7)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் உதவிப்பிரதேச செயலர் திருமதி இ.இரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன்கலந்து கொள்ளவுள்ளார் 10,000மீற்றர் தூரத்திற்கான ஓட்டப் போட்டிகள் இன்று காலை6மணிமுதல் நடைபெறவுள்ளது. (வ)

## தினசரி தியானம்

### பேரானந்தமும் சிற்றின்பமும்

ஆத்மீகச் சாதனைகளும், யோகப் பயிற்சிகளும் உண்மையில் இனிதானவைகளே. ஆனால் பார்வைக்கு அவை வேம்பாகத் தோன்றுகின்றன. இதற்கு மாறாக உண்மையில் வேம்பான இந்திரிய சுகங்களோ, வெளிப்பார்வைக்கு இன்பமூட்டுபவையாயிருக்கின்றன. இதற்குக் காரணம் அவத்தையினால் ஏற்பட்ட புத்தித் தடுமாற்றமே. உன் இஷ்ட மந்திரத்தின் வண்மையால் அவித்தையை வென்று விடலாம்.

சுவாமி சிவானந்தர்

## தவக்கால நற்சிந்தனை

**''உங்கள் கடவுளாகிய ஆண்டவர் நாமே, எனக்கு செவி சாயுங்கள்!''**

''யாரோ எழுதிய ஒரு கூற்று. '' அன்பு என்பது விசுவாசத்தினால் பிறந்து, நம்பிக்கையால் வாழ்ந்து பிறரன்பால் இறப்பது'' இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரை விட்டு அகன்றபோது ஒரே இறைவாக்கினர். அவர்களுடைய விசுவாசத்தை தூண்டி எழுப்பி இறைவனிடம் அன்பு கொண்டிருக்கவும், மனம் திரும்பி நம்பிக்கையோடு வாழவும் அழைக்கின்றார்.இயேசுவும் கடவுள் மேல் அன்பு செலுத்துவதும், தன்னை அன்பு செய்வது போல பிறரை அன்பு செய்வதும் மிகவும் இன்றியமையாதது என வலியுறுத்துகின்றர். தேவையற்றவை மீது நம்பிக்கை வைப்பதால் இயேசு கொடுத்த அன்பு கட்டளைகள் பாதிக்கப்படுகின்றன. ஜாதகத்தில், சூனியத்தில்,மூடப்பழக்க வழக்கத்தில் வைக்கும் நம்பிக்கை கடவுளை முழு ஆன்ம உள்ள வலிமையோடு அன்பு செய்ய தடையாய் உள்ளது. தான் என்ற அகந்தை பணத்தின் மேல் திறமையில் மேல் கொண்ட அளவு கடந்த நம்பிக்கை, பிற மனிதரை மதிக்காமல் இருக்கவும் பிறரன்புக்கு தடையாகவும் உள்ளது. மாறாக பணம், பொருள், திறமை, மற்றும் கொடைகளை இறைவனின் வரங்களாக அன்பின் கொடையாக விசுவாசித்து அதை வாழ்வாக்கி பிறருக்கு நாம் அன்பானவர்களாக மாறினால் அதுவே இயேசுவின் அன்புக் கட்டளைக்கு செவி மடுப்பதாகும்.

காவலன்

## புலிகள்...:

பெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி றமேஸ் அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும் தமிழ்க் கூட்டமைப்பு பாரா ளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கமும் மற்றும் முஸ்லிம் தரப்பில் பிரதி அமைச்சர் பசீர்சேவுதாவுத் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை,முஸ்லிம்க ளின் நெல் வயல்களை இனம் காணும் பொருட்டு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மூன்று பேரும் முஸ்லிம்கள் தரப்பில் மூன்று பேரும் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினர் நாளை கரடியனா ற்றிலும் நாளை மறுதினம் பெண்டுகள் சேனையிலும் எதிர் வரும் 31ம் திகதி தாண்டியடி யிலும் கூடி காணிகள் சம்பந்த மான விபரங்களைப் பெறுவர். (இ)

## யு.என்.எச்.சி.ஆர்...:

கொள்ளப்பட வேண்டிய உடனடி வேலைத் திட்டங்கள் மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினர்.

இச் சந்திப்பின் போது யு.என்.எச. சி.ஆர்,யு.என்.டி.பி, யுனிசெவ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர் பாக பேசினர்.

ஐ.நா.உயர் மட்டக் குழுவில் ஜெனிவா,நியுயோர்க்,கொழும்பு,யாழ்ப் பாணம்,கிளிநொச்சி,மல்லாவி ஆகிய இடங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்ட துடன் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி அளித்தனர்.

இதேவேளை இளைஞர், சிறுவர் நலன் பேணுகின்ற துறை சார்ந்த முன்னேற றங்களை முன்னெடுக்கவும் அதற்கான புள்ளி விபரங்களைத்திரட்டும் நோக்குடன் சர்வதேச தொழி லாளர் அமைப்பினரும் நேற்று வன்னியில் விடுதலைப் புலிகளின் தமிழர் புனர்வாழ்வு கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர். (வ)

## போர் நிறுத்த...

இவவாறு தயாரிக்கப்பட்ட உத்தேச வரைபை அரச-புலிகள் தரப்பினரிடமும் சமர்ப்பித்து அவற்றை உடனடியாக நடை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் கண்காணிப் புக்குழு ஈடுபடவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 24ம் திகதி அரசு-புலிகள்-கண்காணிப்புக் குழு ஆகிய முத்தரப்பினர் மற்றும் நோர்வேத் தூதுவர் ஆகியோர் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்றும் இடம் பெற வுள்ளது.

தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச வரைபில் இரு தரப்பினரையும் ஒப்பமிடச் செய்து அதனை ஏற்றுக் கொள்ளச் செய்தற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக் கப்படவுள்ளன. (த)

## ஈராக் மக்களை...

ஏற்றுமதியில் ஈராக் மீண்டும் ஈடுபட தமது உதவி எப்போதும் உண்டு என ஜனாதிபதி புஷ் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## யாழ்.கோட்டை...

வாழ்க்கையைப் பாதிப்பதாகவும் அச்சுறுத்துவதாகவும் இருப்பதை பொதுஅமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களினதும் பொது மக்களினதும் பலத்த எதிர்ப்பு களையும் பொருட்படுத்தாது இது இராணுவத்தினருக்கு சொந் தமான நிலம் என அறிவிப்புப் பலகை போட்டு இராணுவத்தினர் புல்டோசர்கள் மூலம் காணி யைத் துப்புரவு செய்வதுடன் யாழ்.கரையோரப் பகுதியில் பாரிய அணைகளும் அமைப் பதில் தீவிரமாக ஈடுபட்டு வரு கின்றனர்.

இது இவ்வாறு இருக்க படை முகாம் அமைக்கும் பணியை உடன் நிறுத்தக் கோரி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிரதமர்,பாதுகாப்பு அமைச்சர் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர், புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், நோர்வேத் தூதுவர் ஆகியோருக்கு விலாச மிட்டமகஜர்களை நேற்றுக் காலை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவரிடம் கையளித் துள்ளனர். மகஜர்கள் கையளிக் கும் நிகழ்வில் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மனிதநேய அமைப்புக்களைச் சேர்ந்த அருட்தந்தை பேனாட் அடிகளார்,அரசுசார்பற்ற நிறுவ னங்களின் தலைவர் க.பரமநாதன், கடற்தொழிலாளர் கூட்டு றவுச்சங்க சமாசத்தலைவர் எஸ். தவரத்தினம், முஸ்லிம் அமைப்புக்களின் சார்பில் மொபின், தமிழ் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் ச.பஞ்சலிங்கம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் உட்பட மற்றும் பலர் இடம் பெற்றி ருந்தனர். (ம-7)

(மற்றொருசெய்தி 9ம்பக்கத்தில்)

## உபகரணங்கள் வழங்கல்

(கொக்குவில்)

வேலணை சேர்.வைத்தி லிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான பாட சாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் பாடசாலை அதிபர் பொ.அருணகிரிநாதன் தலை மையில் இன்று நடை பெற வுள்ளது.

தரம் 6 முதல் தரம் 9 வரை கல்வி கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கே வழங்கப் படவுள்ளது. (இ-243)

## வானியல் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் தரம் 9 மாண வர்களுக்கான வானியல் பாசறை இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30மணி முதல் நடை பெறும்.

கல்லூரி வளாகத்தில் நடை பெறும் இவ் வானியல் பாசறை யில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் (ந)


பிற்போடப்பட்டுள்ளது
A/L 2003
வணிகக் கல்வி கருத்தரங்கு

யாழ்-மத்திய கல்லூரியில் இன்று நடைபெறும் வர்த்தக பிரிவிற்கான "வழிகாட்டல் கருத்தரங்கு"ற்கு மாணவர்கள் பங்கேற்பதற்காக எமது நிறுவனத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த "வணிகக் கல்வி" கருத்தரங்கு பின்வரும் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது

30.03.2003
ஞாயிறு காலை 8.30 (பு.நே)

DMI
யாழ் நகர்
(6862)



Patrician Institutes
வாகன உரிமையாளருக்கான அறிவித்தல்

எமது நிறுவனத்தில் பரிசோதிக்கப்பட்ட வாகனங் களுக்கான தகுதிச் சான்றிதழ்கள் (Fitness CERTIFICATE -2003) கிடைக்கப் பெற்றுள்ளதினால் அச் சான்றிதழ்களை திங்கட்கிழமை (31.03.2003) காலை 9.00மணிக்கு வந்து உடன் பெற்றுக் கொள்ளவும்.

புதிதாக வாகனங்கள் பரிசோதித்து சான்றிதழ் பெற விரும்புவோர் வாகனங்களுடன் உடன் எம்முடன்தொடர்பு கொள்ளவும்

மேலதிக விபரங்களுக்கு:. பதிவாளர்
Patrician Institutes
59,St.Patrick's Road,
Jaffna
(C/5887)



யாழ்.மாநகரசபை கேள்வி அறிவித்தல்

இழுபொறியியந்திரமும், இழுவைப் பெட்டியும் நாளாந்த வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்வி கோரல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் குப்பை கூழங்களை அகற்றுவதற்குத் தேவையான இழுபொறி இயந்திரமும், இழுவை பெட்டியும் நாளாந்த வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விக்கூறுகளை கோரப்படுகின்றது. இதன் தொடர்பான விண்ணப்பங்களை தாங்களே தயாரித்து யாழ். மாநகர ஆணையாளர் அவர்களுக்கு 02.04.2003ம் திகதியன்று கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கின்றேன்.

இ.இராமலிங்கம்
யாழ்.மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்
(C/5889)



அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் அன்பு மொழிகள்

அன்னையின் பிள்ளைகள் எழுதிய நினைவுக்குறிப்புகளின் தொகுப்பு
தமிழில்
சுவாமி ஆசுதோஷானந்தர்

நூலை வெளியிட்டவர்கள் :
ஸ்ரீராமகிருஷ்ணமடம்
மயிலாப்பூர்
சென்னை - 600 004

அறிமுகவுரை

இடம் : யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
நேரம் : மதியம் 1.00 மணி
திகதி : இன்று(28-03-2003) வெள்ளிக்கிழமை
தலைவர் : திருமதி கே. பொன்னம்பலம் (அதிபர்)
அறிமுகவுரை : சுவாமி சித்ரூபானந்தா
ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்.
பருத்தித்துறை.

சுவாமி விவேகானந்த கண்காட்சி CD காண்பிக்கப்படும்

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம். பருத்தித்துறை.
செயலாளர்
(C/5867)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
நுண்கலை மன்றம்
'அழகெழல்' போட்டி 2003
பரிசளிப்பு விழாவும் கண்காட்சியும்

காலம் :- 29.03.2003 சனிக்கிழமை பி.ப 2.00 மணி
இடம் :- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
தலைவர் :- அ.ஜெயதீபன்
வாழ்த்துரைஞர் :- கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் (பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
பிரதம விருந்தினர் :- திரு. பி. விக்னேஸ்வரன் (வலயக்கல்விப் பணிப்பாளர்-யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர் :- நா.தெய்வேந்திரம் (தொழில் அதிபர்,நெல்லியடி)
கே. வி. கிருஸ்ணபிள்ளை (தொழில் அதிபர்,உடுப்பிட்டி)

(ஓவியப் போட்டியின் படைப்புக்கள் கண்காட்சிக்கு வைக்கப்படும்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நுண்கலை மன்றம்
யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரி

விளம்பர அன்பளிப்பு:-
சிவகணேசன் புடைவையகம்
யாழ்ப்பாணம்
(C/5890)



அபிராமி எலக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தார் இன்று முதலாவது ஆண்டை நிறைவு செய்து 2-வது ஆண்டில் காலடி வைக்கும் இவ் வேளையில் நண்பர்கள், வாடிக்கை யாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

கிலிப்சால்,ஒரேஞ் சுவிச் வகைகளுக்கும் மற்றும் சகலவிதமான மின்சாரப் பொருட்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

அபிராமி எலக்ரிக்கல்ஸ்
ABIRAMY ELECTRICALS
62/34 STANLEY ROAD(NEAR THE JAFFNA POST OFFICE)
JAFFNA
T.P.: 021 222 2489
C/5888)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.